பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

# சிந்தாமணி

ரூ 2/50

THE MOST INFLUENTIAL TAMIL WEEKLY WITH THE LARGEST CIRCULATION IN SRI LANKA

CHINTAMANI    Sunday, 3—6—1984.    இல. 756    1984 ஜூன் 3 ஞாயிற்றுக்கிழமை    ★ ★    சிந்தாமணி

## ஜனாதிபதி இன்று மொரட்டுவையில்

கொழும்பு, ஜூன் 3

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இன்று மொரட்டுவையில் மாபெரும் கூட்டம் ஒன்றில் உரை நிகழ்த்துவார்.

நாட்டின் தற்போதைய நிலை குறித்து அவர் அங்கு பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதே சமயம் பிரதமர் திரு. ஆர். பிரேமதாச இன்று ஹொரணை தேர்தல் தொகுதிக்கு விஜயம் செய்கிறார்.

"மவ்கம" மாதிரிக் கிராமத்தை அவர் அங்கு திறந்து வைப்பார். (த-7)

## பாரிஸில் சியாங்

சீனப் பிரதமர் சாவோ சியாங் ஆறு ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு பாரிஸ் வந்து சேர்ந்தார். (ண)

கூட்டணி எம். பிக்கள் பதவி துறந்த—

# வடக்கு, கிழக்கு தொகுதிகளுக்கு நியமன பிரதிநிதிகள்

## அரசமைப்பில் திருத்தம் கொண்டுவர ஆலோசனை

கொழும்பு, ஜூன் 3

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வெற்றிடமாக இருக்கும் 16 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும் பிரதிநிதிகளை நியமிக்க அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

இதற்கு ஏற்பாடு செய்யும் விதத்தில் அரசமைப்பில் திருத்தம் கொண்டு வரப்படும் என சிந்தாமணிக்கு நம்பிக்கையாகத் தெரிய வருகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் மூன்று மாத காலத்துக்கு மேல் நாடாளுமன்றத்துக்கு சமுகமளிக்காதிருந்ததைத் தொடர்ந்து கட-

சாங்கத்துக்கு எடுத்துரைத்து பரிகாரம் காண்பதற்கு எவரும் இல்லாததால் மக்கள் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்று சிலர் அரசாங்க மேலிடத்துக்கு எடுத்துரைத்திருக்கிறார்கள்.

அவர்களே பிரதிநிதிகளை

## இயந்திர துப்பாக்கி அபகரிப்பு

யாழ் நிருபர்: கே. அரசரத்தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 2


யாழ். பொலீஸ் அதிகாரிகள் தங்கும் பண்ணை விடுதியில் இன்று காலை 10.00 மணியளவில் நுழைந்த 4 ஆயுதம் தாங்கிய இளைஞர்கள், அங்கு பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் அறையிலிருந்த இயந்திரத் துப்பாக்கியை அபகரித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தனர்.

பிரஸ்தாப பொலீஸ் கான்ஸ்டபிள் திரு.

(2ஆம் பக்கம் பார்க்க)

## வங்காள தேசத்தில்

### எந்தன் உடையும் இடையும் எப்படி?



எப்படி இருக்கிறது எந்தன் உடை? — என்று
ஏவுகிறாள் கேள்விஇந்த அன்னப் பெடை
துங்கக் கரமிரண்டு தழுவும் இடை — கீழே
தாங்கி நிற்பனவோ வாழைத் தொடை — வீரன்

காலத்துக்கு மேல் நாடாளு மன்றத்துக்கு சமுகமளிக்கா திருந்ததைத் தொடர்ந்து கடந்த ஆண்டு ஜூலை மாதத்தின் பின்னர் வடக்கு – கிழக்கில் 16 நாடாளுமன்ற ஆசனங்கள் காலியாகின.

அதன் பின்னர் அப் பகுதி மக்களின் குறைபாடுகளையும், அன்றாடப் பிரச்சினைகளையும் அர

சாங்க மேலிடத்துக்கு எடுத்துரைத்திருக்கிறார்கள்.

அவர்களே பிரதிநிதிகளை வடக்குக் – கிழக்கில் நியமிக்க வேண்டும் என்ற யோசனையையும் அரசாங்கத்துக்கு தெரிவித்திருக்கிறார்கள்.

இதற்கு ஏற்ற வகையில் அரசமைப்பைத் திருத்த ஆலோசி

(2ஆம் பக்கம் பார்க்க)

தூங்கக் கரமிரண்டு தழுவும் இடை — கீழே
தாங்கி நிற்பனவோ வாழைத் தொடை — வீரன்

★

நெஞ்சைத் துளைக்கவல்ல பஞ்சுக் கணை — நேராய்
நிமிர்ந்து நிற்குமிரு வேலுக் கிணை — சற்று
கொஞ்சத் துடிக்கும் இளம் காளைகளை — இவள்
கொல்லாமல் கொல்வாளே காலைவரை!

# வங்காள தேசத்தில் அமெரிக்கத் தளம்?

அமெரிக்கக் கடற்படைக் கப்பல்கள் எண்ணெய் மாற்றிக் கொள்வதற்கான வசதிகளைக் கொண்ட தளம் ஒன்று வங்காள தேசத்தின் சென். மார்ட்டின்ஸ் தீவில் அமைக்கப்படவிருக்கிறது என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

தெற்கு ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க உதவி வெளிவிவகார அமைச்சர் ஹோவார்ட் ஷாபர் அண்மையில் வங்காள தேசம் வந்திருந்தார்.

சென். மார்ட்டின்ஸ்

(2ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காம உற்சவம் 28 இல்

கொழும்பு, ஜூன் 13

கதிர்காமம் வருடாந்த உற்சவம் இம் மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றது. தீர்த்தோற்சவம் ஜூலை 12 ஆம் திகதி நடைபெறும்.

(த-ப)

## ஜீ. சி. ஈ, உயர்தர மாணவர்கள்

# போதன மொழியை தாமே தீர்மானிக்கலாம்

## சர்வகட்சி மாநாட்டில் யோசனை

கொழும்பு, ஜூன் 2

ஜீ. சீ. ஈ. உயர்தர வகுப்பு மாணவர்கள் தங்கள் போதன மொழியைத் தாங்களே தெரிவு செய்வதற்கான உரிமையை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்ற யோசனை ஒன்று வெள்ளியன்று சர்வகட்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டது.

ஜீ. சீ. ஈ. சாதாரண தரம் வரை தமிழ், அல்லது சிங்களத்தைப் போதன மொழியாகக் கொண்டிருந்த மாணவர்கள் ஜீ. சீ. ஈ. உயர்தரத்திலிருந்து தமது விருப்பத்தின் பேரில் ஆங்கிலத்தில் கல்வி கற்பதற்கு இந்த யோசனை வழிவகுக்கும் என்றும் —

நிதி நிலைமைகள் எவ்வாறு இருப்பினும் எல்லாத் தரப்பு மாணவர்களும் ஆங்கிலத்தில் கல்வி கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதே இந்த யோசனையின் நோக்கம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

உள்நாட்டு அலுவல்கள்

(2ஆம் பக்கம் பார்க்க)

# பலஸ்தீன தூதுவர் நேற்று ஜனாதிபதியை சந்தித்தார்

கொழும்பு, ஜூன் 3

இலங்கையிலுள்ள பலஸ்தீன தூதுவர், நேற்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை சந்தித்துப் பேசினார்.

இலங்கையில் இஸ்ரவேல் நலன் காப்பு பிரிவு திறுவுவதை ஆட்சேபித்து எந்த ஒரு அரசிற் கட்சி ஏற்பாடு செய்யும் பொதுக் கூட்டத்திலும் தான் கலந்து கொள்ளப் போவதில்லை, என்று அவர் அப்போது ஜனாதிபதியிடம் உறுதியளித்தார் என்று தெரிகிறது.

பலஸ்தீன தூதுவர் கலாநிதி ஹைறுத்தீன் அப்துல் ரஹ்மான் இதற்கு முன்னர் வெள்ளிக்கிழமை வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டார். அவர் கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாடு குறித்து அமைச்சு விளக்கம்

(2ஆம் பக்கம் பார்க்க)

## நோன்பு தொழுகை நேரம்

| | | |
|---|---|---|
| ஸஹர் முடிவு | — காலை | 4.17 |
| ஸுபஹு | — காலை | 4.33 |
| சூரிய உதயம் | — காலை | 5.53 |
| ளுஹர் | — பகல் | 12.20 |
| அஸர் | — பி.பகல் | 3.36 |
| மஃரிபு | — மாலை | 6.25 |
| இஷா | — இரவு | 7.45 |

## காத்தான்குடியில் இஸ்ரவேல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

காத்தான்குடியிலும் இஸ்ரவேல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

காத்தான்குடி முதலாம் குறிச்சி மெத்தப் பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை தொழுகை முடிந்த பின்னர் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

காத்தான்குடி பிரதான வீதியில் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஊர்வலம் சென்றனர்.

"இஸ்ரவேலை வெளியேற்று"

அரசாங்கத்தில் உள்ள முஸ்லிம் அமைச்சர்கள் இராஜினாமாச் செய்ய வேண்டும்"

"இலங்கையில் பயங்கரவாதத்தை அடக்க சர்வதேச பயங்கரவாதமா?"

— போன்ற கோஷங்கள் ஊர்வலத்தில் எழுப்பப்பட்டன.

கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் இதே போன்ற ஆர்ப்பாட்டங்கள் வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

(த-318)

# பிரதமரின் பேச்சு: இந்தியா கண்டனம்

புதுடில்லி, ஜூன் 2

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா, இந்தியாவைத் தாக்கிப் பேசியமை குறித்து இந்தியா வெள்ளியன்று கண்டனம் தெரிவித்தது.

இத்தகைய பேச்சுக்கள் இரு நாட்டு உறவுகளைப் பாதிக்கலாம் என்றும் இந்தியா தெரிவித்தது.

பிரதமர் திரு. ஆர். பிரேமதாச, கடந்த மே 25 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரை குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர், ஒருவர் வெள்ளியன்று கருத்து வெளியிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:—

நாடு சுதந்திரம் அடைந்த தன் பின்னர் இந்தியாவின் மீது அல்லது பிரதமரின் (இந்திரா) மீது இப்படியொரு படுமோசமான தாக்குதல் தனிப்பட்ட முறையில் தொடுக்கப்பட்டது கிடையாது.

இத்தகைய ஆத்திரமூட்டும் வார்த்தைப் பிரயோகங்களைக் கண்டனம் செய்ய மாத்திரமே எம்மால் இயலும்.

முற்றிலும் முகாந்திரமற்ற குற்றச்சாட்டுக்களே இந்தியாவின் மீது சுமத்தப்பட்டிருக்கின்றன.

ஒரு நட்பு நாடென்ற வகையில் இலங்கை அரசாங்கத்துக்

(2ஆம் பக்கம் பார்க்க)

## பஞ்சாப்பில் ஜனதா தலைவர் சுட்டுக் கொலை!

புதுடில்லி, ஜூன் 2

ஜனதாக் கட்சியின் பஞ்சாப் மாநிலத் தலைவர் ஓம்பிரகாஷ் பாக்கா (வயது 50) இன்று சீக்கிய தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இத்துடன் மொத்தம் 18 பேர் நேற்று மீண்டும் வெடித்த வன்முறைகளில் மாண்டிருக்கின்றனர்.

வெள்ளிக்கிழமை இரவு முழுவதும் பஞ்சாப்பில் பல பகுதிகளில் துப்பாக்கிச் சண்டைகளும், தாக்குதல்களும் நடந்தன. அவற்றில் 17 பேர் மாண்டனர். 46 பேர் காயமுற்றனர்.

அதைத் தொடர்ந்து ஜனதா தலைவர் ஓம்பிரகாஷ் பாக்கா இன்று சுட்டுக் கொல்லப்பட்டார். வடகிழக்கு நகரான ஹோஷியார்பூரில் மூன்று தீவிரவாதிகள் அவரைச் சுட்டுக் கொன்றனர்.

ஓம்பிரகாஷ் பாக்கா முன்னாள் சட்டசபை உறுப்பினர். ஜனதாக் கட்சியின் பஞ்சாப் மாநில நிர்வாகக் குழு அங்கத்தவர்.

சீக்கியர்களின் புனித நகரான அமிர்தசரஸில் நேற்றிரவு இந்திய பாதுகாப்பு படைகளுக்கும் சீக்கிய தீவிரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்தது. ஏழு மணி நேரத்துக்கும் மேலாக சண்டை நீடித்தது.

அங்கு பதினொரு பேர் உயிரிழந்தனர். 29 பேர் காயமுற்றனர்.

(த-ப)

## இஸ்ரவேல் கொடி எரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 2

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இஸ்ரவேல் எதிர்ப்பு ஊர்வலத்தின் போது இஸ்ரவேல் தேசியக் கொடி தீவைத்துக் கொளுத்தப்பட்டது.

சுமார் இரண்டாயிரம் முஸ்லிம்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

ஜும்மாத் தொழுகையை அடுத்து யாழ். பெரிய பள்ளிவாசலில் கண்டனக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. (120)

## தாக்குதல்

ஈராக்கிய ஜெட் யுத்த விமானங்கள் பாரசீக வளைகுடாவில் வைத்து கப்பல் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தின.

ஈரானை அண்டியுள்ள பகுதியிலேயே இத் தாக்குதல் நிகழ்ந்தது. பாக்தாத் வானொலி இச் செய்தியை ஒலிபரப்பியது.

(ண)

# ஜனாதிபதியிடம் பதியுத்தீன் விளக்கினார்

## இஸ்ரவேல் அபாயம் குறித்து

கொழும்பு, ஜூன் 3

கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் இஸ்ரவேல் நலன்காப்புப் பிரிவு குறித்துப் பேசினார்.

சர்வகட்சி மாநாட்டுக்கு வந்திருந்த பொழுது இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது.

சந்திப்பின் போது இஸ்ரவேல் நலன்காப்புப் பிரிவினால் இலங்கைக்கு ஏற்படக் கூடிய பேராபத்துக்கள் குறித்து கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் ஜனாதிபதிக்கு விளக்கினார்.

சந்திப்பின் போது அவர் ஜனாதிபதியிடம் தெரிவித்தாவது.—

இஸ்ரவேல் நலன்காப்புப் பிரிவினால் இலங்கையில் முஸ்லிம்களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையில் நிலவும் நீண்டகால நல்லுறவு பாதிக்கப்படும். இந்த இரு சமூகங்களுக்கும் இடையே

(2ஆம் பக்கம் பார்க்க)

ஆகக் கூடுதலான விற்பனையுள்ள தமிழ் வார இதழ் சிந்தாமணி தான்

# சிந்தாமணி சிறுவிளம்பரங்கள்

## அகராதி

ஆங்கில — தமிழ் அகராதி விற்பனைக்குண்டு. 325 பக்கங்கள். விலை 18/50. வி. பி. பியில் பெறுவதற்கு 3/50 முத்திரை அனுப்பவும். இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது.

"English-Tamil Dictionary"
S. Hariharan, 63/11. Paramananda Vihara Mawatha, Colombo—13.

வி. இ. 028602

## "நண்பர் தொடர்பு"

உள்நாட்டு, வெளிநாட்டு பேனு நண்பர்களின் விலாசங்களைக் கொண்டது — "கோவை" விலை 4/- தபாலில் பெற விரும்புவோர் 4/50க்கு முத்திரை அனுப்பவும்.
Kovai — Book Sellers, 189, Central Road, Colombo 12.

வி. இ. 031586

## கதைப் புத்தகம்

எம். ஜீ. ஆர். கதைப் புத்தகம் விற்பனையாகிறது. தபாலில் பெற விரும்புவோர் 5/40க்கு முத்திரை அனுப்பவும்.
Kovai-Book Seller's 189, Central Road, Colombo-12.

வி. இ. 031587

## கருங்கல் பொருட்கள்

கோவில் தள வரிசை கல், கோமுகி கல் அத்துடன் அம்மி, ஆட்டுக்கல், உரல், திருகை அனைத்தும் கருங்கல்லினால் கைதேர்ந்த தொழில்நுட்பக் கலைஞரால் கடையப்பட்டது. கிழக்கு மாகாண மக்களின் நன்மைக்காக எமது அனைத்துப் பொருட்களும் கிடைக்கும் இடம்: ஏ. எல். தங்கமுத்து, நகை அடைவு கடை, செங்கலடி, ஏறூர், — சூரியா ஸ்டோர்ஸ், கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.

வி. இ. 023521

## மாதர்களுக்கு

## சிங்கள நூல்

தமிழ் மூலம் சிங்களம் கற்றுப் பேசவும், எழுதவும் "சிங்கள கோஸ்" விலை 12/- வி. பி. பியிலும் பெறலாம். சகல வழிமுறைகளும் தரப்பட்டுள்ளன.
"Sinhala Course"
Bond Institute, 89/15, Jampettah Street, Colombo—13.

வி. இ. 028601

## கல்விச் சேவை

ஆசிரியரின்றி சுயமாக விரிவான இலக்கணத்துடன் இலகுவில் ஆங்கிலம் பேச, "SPOKEN ENGLISH" எழுத — வாசிக்க பட்டதாரி ஆசிரியர்களினால் ஆக்கப்பட்ட பாடத் தொகுப்புகள் பல. விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.
Lanka Excellent English Service, P. O. Box 119. Jaffna.

வி. இ. 031733

## ஆங்கில நூல்

தமிழின் உதவியுடன் இலகு வழியில் ஆங்கிலம் பயின்று உரையாடவும், எழுதவும் — "ஈஸி இங்லிஷ்" விலை 12/50 வி. பி. பியிலும் பெறலாம். இலக்கண ரீதியாகப் பயிலும் இச்சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள். (Easy English)
S. Hariharan, 63/11. Paramananda Vihara Mawatha, Colombo 13.

வி. இ. 028602

## பக்திப் பாடல்கள்

முந்தானை முடிச்சு, தங்கைக்கோர் கீதம், தூங்காதே தம்பி தூங்காதே, மற்றும் பழைய, புதிய சினிமாப் படப் பாடல்கள், இஸ்லாமிய கீதங்கள், பக்திப் பாடல்கள், கிறிஸ்தவ கீதங்கள் பதிவு செய்யப்பட்ட கஸட்கள் வாங்கச் சிறந்த இடம்:
Twinkle, P1, Front Street. Colombo 11.

வி. இ. 031343


# பிரதமரின் பேச்சு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
கும், மக்களுக்கும் எமது வழக்கத்துக்கும் மேலாக நட்புறவையும், நல்லெண்ணங்களையும் நாம் வழங்கி வந்திருக்கிறோம்.

அத்தகைய எம்மீது இப்படி தாக்குதல் தொடுக்கப்பட்டது குறித்து நாம் ஆச்சரியமும், கவலையும் அடைந்திருக்கிறோம்.

எமது இரு நாடுகளுக்கும் இடையே நீண்ட காலமாக இருந்து வரும் நட்புறவைக் கெடுக்கத் திட்டமிட்ட முயற்சிகளாகவே இவை அனைத்தும் தோன்றுகின்றன.

இலங்கையின் தூரதிர்ஷ்டமிக்க மக்கள், இரு நாட்டு நல்லுறவுகளில் சிரமைக்க முடியாத பாதிப்பு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

இந்தியாவின் மீது தேவையற்ற, அர்த்தமற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்தும் ஒரு திட்டமிட்ட பிரசாரத்தை அண்மைக் காலத்தில் இலங்கையின் சில பத்திரிகைகள் ஆரம்பித்திருக்கின்றன.

இனப் பிரச்சினையிலிருந்து கவனத்தைத் திசை திருப்பித் தவறாக மக்களை வழிநடத்துவதற்கென்றே இந்திய எதிர்ப்புப் பிரசாரம் தூண்டப்படுகிறதா?

இப்படி அவர் வினா எழுப்பினார்.

(ப)

# போதனா மொழி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் தலைமையில் சர்வகட்சி மாநாடு நியமித்த குழு நேற்று மாநாட்டுக்கு இடைக்கால அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது.

அந்த அறிக்கையிலேயே மேற்படி யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பாடசாலைகளுக்கு இடையிலான ஏற்றத் தாழ்வுகள் நீக்கப்படும் வரை இந்த யோசனையை அமுல் செய்வதை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் ஒரு ஆலோசனை மாநாட்டுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் மாணவர்களுக்கு சிங்களமும், சிங்கள மாணவர்களுக்குத் தமிழும் கற்பித்தல், தோட்டப் பகுதி பாடசாலைகளின் பிரச்சினைகள், ஆங்கிலக் கல்வியின் தரம் ஆகியன பற்றி இன்னும் சில யோசனைகளும் தேவநாயகம் குழு சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

அதிகாரத்தைப் பரவலாக்குதல் பற்றி ஆராய பிரதமர் திரு. ஆர். பிரேமதாச தலைமையில் நியமித்த குழுவும் மாநாட்டுக்கு இடைக்கால அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா அமெரிக்கா செல்ல இருப்பதால் அவர் இந்தப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதும் ஜூலை 5 ஆம் திகதி அடுத்த சர்வகட்சி மாநாட்டின் முழு அளவிலான கூட்டம் நடைபெறும் என்று மாநாட்டுப் பேச்சாளரும், தேசிய பாதுகாப்பு அமைச்சருமான திரு. லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

எனினும் அதற்கிடையில் இரண்டு குழுக்களும் இம் மாதம் 15 ஆம், 20 ஆம் திகதிகளில் கூட்டப்படும்.

இந்தக் குழுக்கள் அறிக்கை தயாரிப்பதில் ஏற்பட்டிருக்கும் நடைமுறைச் சிக்கல்கள் காரணமாகவே தாமதம் ஏற்பட்டிருக்கிறதென்றும் அமைச்சர் திரு. அத்துலத் முதலி கூறினார்.

எனினும் குழுக்கள் சில பணிகளை நிறைவேற்ற முயற்சித்து வருகின்றன. இதில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று, அவர் சொன்னார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதிகளும் மாநாட்டில் கலந்து கொண்டனர். அவர்கள் சில அறிக்கைகளை விடுத்தனர்.

ஆனால் அவை பொதுவான அறிக்கைகள். மாநாட்டுக் குழுக்கள் பற்றி அவர்கள் எதை

# ஜனாதிபதி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
பிளவு ஏற்படுவதை அனுமதிப்பதாக அமையும்.

அரபு - முஸ்லிம் நாடுகளுடன் இலங்கை கொண்டுள்ள முதற்தர ராஜதந்திர நல்லுறவுகளை இதன் மூலம் இழக்க நேரிடும்.

இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தின் தலைநகரான பம்பாயில் இஸ்ரவேல் கொன்ஸுலேட் உறவு வைத்திருப்பது அங்குள்ள மிகக் குறைந்த எண்ணிக்கையான யூதர்களின் நலன்களைக் காப்பதற்காகவே.

அங்குள்ள யூதர்கள் மகாராஷ்டிர மாநிலத்துக்கு அப்பால் செல்ல தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் அவ்வாறான சூழ்நிலை எதுவும் இல்லை. எனவே இந்தியாவில் உள்ள நிலைமையை

# தமிழரை மட்டும் அல்ல முஸ்லிம்களையும் ஒடுக்க சதி

## நரிக்கு பயந்து கரடியை வரவழைப்பது போன்றது

### இஸ்ரவேல் எதிர்ப்புக் கூட்டத்தில் கருத்து

நிந்தவூர், ஜூன் 2

தமிழ் மக்களை மட்டுமன்றி முஸ்லிம் மக்களையும் இந்த நாட்டில் அடக்கி ஒடுக்குவதற்கு அரசாங்கம் செய்யும் சதியே இஸ்ரவேல் நலன் காப்புப்பிரிவு ஆகும். பயங்கர வாதிகளை அடக்குவதற்கு இஸ்ரவேலர்களை இங்கு அழைப்பது நரிக்குப் பயந்து கரடியை வரவழைப்பது போன்றது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் திகாமடுள்ள மாவட்ட அமைப்பாளர்களுள் ஒருவரான ஜனாப் ஏ. முகைதீன்பாவா மேற்கண்டவாறு கூறினார்.

அம்பாறை மாவட்ட, மக்கள் பொதுக் காங்கிரஸ், இலங்கையில் இஸ்ரவேல் நலன் காப்புப் பிரிவு ஏற்படுத்தப்படுவது தொடர்பாக நடத்திய கலந்துரையாடலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள பொது இயக்கங்கள், ஸ்தாபனங்கள், கழகங்கள் என்பவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்த கலந்துரையாடல் அக்கரைப்பற்றிலுள்ள காங்கிரஸ் அலுவலகத்தில் நடைபெற்றது.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜனாப் எம். எம். ஹாஷீம் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் அமைப்பாளர் ஜனாப் முகைதீன் பாவா தொடர்ந்து பேசுகையில்,

இன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் சிந்தனை இந்த நாட்டில் இஸ்ரவேலர்களுக்கு தளம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பது தான்.

உலக முஸ்லிம்களை, குறிப்பாக மத்திய கிழக்கு முஸ்லிம்களை அடக்கி ஒடுக்கவென உருவாக்கப்பட்ட இஸ்ரவேலுக்கு இடமளிப்பதை எந்த முஸ்லிமும் அனுமதிக்க முடியாது என்றார்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் கிழக்குப் பிராந்தியப் பணிப்பாளர் ஜனாப் எம். ஐ. உதுமா லெவ்வை பேசுகையில்,

"இஸ்ரவேலர்கள் இலங்கைக்குள் பிரவேசிப்பதால் நாட்டுக்கும் மக்களுக்கும் எத்தகைய தீங்குகள் விளையப் போகின்றன என்பதை எமது அரசியல் தலை

இதனால் முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி பௌத்த நாடு என மார் தட்டுவோரும் நிச்சயம் பாதிப்பை அடைவர் என்றார்.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜனாப் எம். எம். ஹாஷீம் பேசுகையில்,

"சர்வதேச பயங்கரவாத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் மொத்தவிளை நிலமாகவும், அரபு நாடுகளின் இறைமைக்கும், பாதுகாப்புக்கும் பாரிய அச்சுறுத்தலாகவும் விளங்கும் இஸ்ரவேலுடன், இலங்கை எந்த மட்டத்திலாவது இராஜதந்திர உறவுகளை மீள்விக்க எடுக்கும் நடவடிக்கைகளை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்" என்றார்.

காங்கிரஸ் உதவிச் செயலாளர் ஜனாப் கே. எம். நஜிமுதீன், நிந்தவூர் நன்னோக்கு சபைத் தலைவர் அல்ஹாஜ் எம். எச். யாகூப் ஹஸன், அக்கரைப்பற்று ஜெம்இய்யத்துல் உலமா சபைச் செயலாளர் மௌவி எம். ஏ. எம். இஸ்மாயில், நிந்தவூர் மக்கள் சபைச் செயலாளர் ஜனாப் எஸ். எச். முகம்மதுஅலி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அக்கரைப்பற்று அமைப்புக் குழுத் தலைவர் ஜனாப் ஏ. பீ. இஸ்மாயில், —

சம்மாந்துறை ஜம்இய்யத்துல் உலமாசபை உறுப்பினர் மௌலவி எம். ஐ. அப்துல் காதர், சம்மாந்துறை வை. எம். எம். ஏ. கிளைத்தலைவர் ஜனாப் யூ. எல். பஷீர், சாய்ந்தமருது மஜ்லிசே இஸ்லாமி தலைவர் ஜனாப் எம். ஜே. எம். நிஸார்,

பாலமுனை முஸ்லிம் லீக் கிளைத் தலைவர் ஜனாப் ஐ.பீ.எம். ஜிப்ரி, பாலமுனை ஐ.தே.க. வடக்கு கிளைத் தலைவர் ஜனாப் ஐ. ஆதம் லெவ்வை, அக்கரைப்பற்று வை.எம்.எம்.ஏ. கிளைத் தலைவர் ஜனாப் முகம்மது ஏ.எம். இப்றாகீம், மௌலவி எம். எம். ஹஸன், ஜனாப் எம். ஐ. எம். யாசீன் ஆகியோரும் உரையாற்றினர்.

(த-217)

# பிறந்த நாள் வாழ்த்து



செல்வப் புதல்வன் மொகமட் ஜமீர்

இலக்கம் 49, ... சேர்ந்த நிஸ்தார் — பஹீரா

## மாதர்களுக்கு

மாதர்களின் மாதவிடாய் எவ்வளவு தாமதமானாலும் உடன் நிவாரணம் பெறுவதற்கும், பாதுகாப்பான சிகிச்சை பெறுவதற்கும் சந்தியுங்கள். பூரண சுகத்தின் பின் பணம் செலுத்தலாம் சிகிச்சை நிலையம், தினசரி திறந்திருக்கும். சிவிராஸ் கிளினிக், மரதன் கடவல.

வி. இ. 226482

## தீப நூல் விற்பனை

திருச்செந்தூர் தீபதரிசனை வெண் தாமரை நூல் நாடெங்கிலும் விற்பனையாகின்றன. பக்கெட்டின் விலை 3/50. மொத்த விற்பனையாளர்கள்: கண்டி:- போவத்த மெடிகல் ஸ்டோர்ஸ், ராகலை:- அழவை விநாயகர் ஸ்டோர்ஸ், நுவரெலியா:- பெரோஸ் டிரேடர்ஸ். விபரங்களுக்கு, பி. கே. சாமி, 33, தினச் சந்தை, நுவரெலியா.

வி. இ. 226481

## ராஜ வசியம்

எமது கட்டணம். ராஜ வசியம் 330/-, கரும பிணி நிவர்த்தி 87/-, ஸ்திரி — புருஷ குடும்ப வசியம் 69/-, தொழில் சிறப்பு, பெரியோர்களின் நல் ஆசி பெற, வசிய மூலிகை பாதுகாப்பு யந்திரம் 45/-, முன் அறிவிப்பு ஆலோசனை **(APPOINTMENT)** 150/-, ஜாதக குறிப்பு, பலாபலனுடன் 45/-, விசேஷ கல்வி ஞான கவசம் 72/-. எமது மலையாள மாந்திரீகம், எம்மதத்தினருக்கும் உகந்தது. தேவைக்குரிய விடயத்திற்கு, மணி ஓடர் அனுப்புவது அவசியமே. வருகை தர வேண்டிய முகவரி: ஜோதிட மாந்திரீக தத்துவ ஞானி பி. கே. சாமி, திருமக்கள்ஸ், எண்ணின் பலன் நிறுவனம், இல. 33, தினச் சந்தை. நுவரெலியா.

வி. இ. 226481

## கட்டழகு

பெண்கள் கட்டழகுடன் திகழ தனது உயரத்திற்கும், பருமனுக்கும் ஏற்ற மார்பகங்கள் அல்லாது மெலிந்து, நலிந்து போன பெண்களுக்கு அழகான, பருமனான மார்பகங்களையும், தோற்றத்தையும் பெற விரும்பினால் சுய விலாசமிடப்பட்ட முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்க. முகவரி: லீலாவதி அத்தனயக்க, 55, மிகுந்து மாவத்தை, கொழும்பு-12.

வி. இ. 226481

## நியூமரலாஜி

உங்களின் பிறந்த திகதியிலும், பெயரமைப்பிலும் பொதிந்துள்ள துரதிர்ஷ்டங்களை — நியூமராலஜி எண் கலையின் மூலம் அறிந்து, உங்களின் பிறந்த திகதிக்கு ஏற்ற பொருத்தமான பெயரமைப்பு, திருமணங்கள், தொழில்கள், வியாபாரம், நிறங்கள், நண்பர்கள் இலக்கங்கள், சுப தினங்கள், இரத்தினம், பிரயாணம் முதலான இன்னோரன்ன பல அம்சங்களையும், அதிர்ஷ்டமாக அமைத்து, உங்கள் வாழ்க்கையினை மகிழ்ச்சிகரமானதாக ஆக்கிக் கொள்ள விரும்பினால் எமக்கு விண்ணப்பியுங்கள்.

Sulfika Buhary. 86, Horana Road, Eluwila, Panadura.

வி. இ. 031551

## யந்திரம் மந்திரம்

யாருக்கும் சொல்ல முடியாத. சொல்லியும் பலன் கிடைக்காத மனக் கஷ்டங்களா, காதலர்களுடைய பாசம் மாறுமல் இருக்க வேண்டுமா கணவன் - மனைவியிடையே உள்ள சச்சரவு, வெறுப்பு சந்தேகம் தீரவேண்டுமா, குடும்பத்தில் அன்பும், சமாதானமும் நிலைக்க வேண்டுமா, தேவையானவர்களுடைய ஆதரவைப் பெற வேண்டுமா. இவை யாவற்றிற்கும் நிவாரணம் அளிக்கப்படும். இரகசியங்கள் வெளியிடப்பட மாட்டா. விவரங்களுக்கு சுய விலாசமிடப்பட்ட முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்க. முகவரி:- பி. எம். திசாநாயக்கா, அரசாங்க பதிவு பெற்ற குப்த விஞ்ஞான மாந்திரீக நிபுணர் (நான்கு தேவாலய பிரதம தர்மகர்த்தா), 55, மிகுந்து மாவத்தை, கொழும்பு-12 தொலைபேசி:- 33955.

வி. இ. 031816

## ஆடவர்களுக்கு!

ஆடவர்களே! உங்கள் அந்தரங்கமான உறுப்பில் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் நிவர்த்தி செய்து கொள்ள விபரங்களுக்கு சுய விலாசமிடப்பட்ட முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்க. முகவரி:- பி. எம். திசாநாயக்கா, அரசாங்க பதிவு பெற்ற குப்த விஞ்ஞான மாந்திரீக நிபுணர் (நான்கு தேவாலய பிரதம தர்மகர்த்தா), 55 மிகுந்து மாவத்தை, கொழும்பு-12.

வி. இ. 031816

இலங்கையில் அவ்வாறான சூழ்நிலை எதுவும் இல்லை. எனவே இந்தியாவில் உள்ள நிலைமையை இலங்கையுடன் ஒப்பிட முடியாது.

இஸ்ரவேலர்கள் முஸ்லிம்களின் முதலாவது கிப்லாவாகிய பைத்துல் முகத்தஸை ஆக்கிரமித்து அழிக்க முயன்றவர்கள். அவர்கள் அல்குர்ஆனிலேயே சபிக்கப்பட்டவர்கள். இக்காரணங்களினாலேயே இலங்கை முஸ்லிம்கள் உட்பட முழு உலக முஸ்லிம்களும் அவர்களை வெறுக்கிறார்கள்.

அரபு மக்களின் நலனுக்காக மட்டும் இலங்கை முஸ்லிம்கள் அவர்களை வெறுக்கவில்லை.

மேற்கண்டவாறு கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறினார்.

(த-8)

## அட்டனில் தொழிலாளர் விவசாய முன்னணி கூட்டம்

கொழும்பு, ஜூன் 3

தொழிலாளர் விவசாய முன்னணியின் கூட்டம் ஒன்று இன்று அட்டனில் நடைபெறும்.

திரு. பி- பழனிசாமி தலைமையில் நடக்கும் இக் கூட்டத்தில், பல தோட்ட தலைவர்களும், பௌத்த பிக்குகளும் கலந்து கொள்வர்.

(த-ஞ)

...தனர் விடுத்தனர்.

ஆனால் அவை பொதுவான அறிக்கைகள். மாநாட்டுக் குழுக்கள் பற்றி அவர்கள் எதையும் தெரிவிக்கவில்லை என்றும் அமைச்சர் கூறினார்.

...குள் பிரவேசிப்பதால் நாட்டுக்கும் மக்களுக்கும் எத்தகைய தீங்குகள் விளையப் போகின்றன என்பதை எமது அரசியல் தலைவர்களும், அரசியல் வாதிகளும் அரசினரும் உணரவில்லை.

## வடக்கு, கிழக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிக்கப்பட்டு வருகிறது.

தனிநாடு கோரும் தமிழ்த் தலைவர்களோ அல்லது தீவிரவாதிகளோ மக்களின் அன்றாடப் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதற்கு இந்த பதவிகளை பெற முன்வரப் போவதில்லை எனவே மக்கள் குறை தீர்ப்பதில் அக்கறையும். ஈடுபாடும் உள்ளவர்களை இந்தப் பதவிகளில் நியமிக்க வேண்டும் என்று அரச தரப்பு அரசியல் வாதிகளிடம் வடக்கு – கிழக்கு பிரமுகர்கள் சிலர் வேண்டுகோள் விடுத்துள்ளனராம்.

காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸாநாயக்கா இந்த யோசனை பற்றி "சிந்தாமணி"க்கு பின்வருமாறு தெரிவித்தார்;—

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் இப்போது பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியிருக்கின்றனர். நாட்டுப் பிரிவினைக்கும், பயங்கரவாதத்துக்கும் எதிரான மக்கள் தங்கள் பிரச்சினைகள் பற்றிப் பேசித் தீர்வு காண்பதற்கு தங்களைப் பிரதிநிதித்துவம் செய்ய சிலர் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள விருப்பமுடைய தமிழ்ப் பிரமுகர்கள் இருக்கிறார்கள் பயங்கரவாதிகளுக்குப் பயந்து தமிழ்ப் பிரமுகர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முன்வரா விட்டால் சிங்கள- முஸ்லிம் பிரமுகர்களை அந்தப் பதவிகளில் நியமிக்கலாம். மிதவாதப் போக்குடைய தமிழ் மக்கள் தாம் இதனை எதிர்க்கவில்லை என்று என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த யோசனையைச் செயல்படுத்துவதன் மூலம் இன்று கஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கும் தமிழ் மக்களுக்கு அரசாங்கம் பல வழிகளிலும் உதவிகளை வழங்க முடியும்.

தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்து அவர்களின் குறைகளைத் தீர்க்க பல சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் விருப்பம் கொண்டிருக்கிறார்கள்.

— இப்படி அவர் சொன்னார்.

(த-ப)

## பலஸ்தீன தூதுவர் நேற்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோரியது.

பத்திரிகையாளர் மாநாட்டில் வெளியிட்ட சில கூற்றுக்கள் தொடர்பாக அவர் நேற்று ஜனாதிபதியைச் சந்தித்த போதும் விளக்கமளித்தார் என்று தெரிய வருகிறது.

இலங்கையிலுள்ள ஈராக் தூதுவரும் நேற்றுக் காலை ஜனாதிபதியைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனினும் ஈராக் தூதுவர் சுகவீனமுற்றிருப்பதால் இந்தச் சந்திப்பு நேற்று நடைபெறவில்லை.

(த-ப-8)

## இயந்திர துப்பாக்கி....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அகஸ்டீன் சம்பவம் நடைபெற்ற பொழுது விடுதியில் இருக்கவில்லை. அவரது மனைவியே இருந்தார்.

அகஸ்டீனின் உயிருக்கு விடுக்கப்பட்ட பயமுறுத்தலை அடுத்தே இந்த துப்பாக்கி அவருக்கு வழங்கப்பட்டிருந்ததென பொலீஸ் உயர் அதிகாரி ஒருவர் "சிந்தாமணி"க்குத் தெரிவித்தார்.

யாழ். பொலீஸார் இது சம்பந்தமாக புலன் விசாரணை நடத்தி வருகின்றனர்.

(த-ப-8-120)

## வங்காள...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீவு பற்றி அவர் டாக்காவில் பேச்சுக்கள் நடத்தினார்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கடற்படைத் தளங்களை அமைக்கும் நோக்கம் அமெரிக்காவுக்குக் கிடை...

அமெரிக்காவின் சுமார் ஐம்பது ராஜதந்திரிகள், பொருளாதார வல்லுநர்கள், நிபுணர்கள் கடந்த அக்டோபர் மாதத்தின் பின்னர் வங்காளதேசத்துக்கு அடுத்தடுத்து வந்திருக்கிறார்கள்.

செ‌ன். மார்ட்டின்ஸ் தீவு தொடர்பாக அமெரிக்காவும், வங்காளதேசமும் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள இரண்டு தடவைகள் முயற்சித்தன. ஆனால் நாட்டில் வன்மையான எதிர்ப்புக் கிளம்பும் என்பதால் இரண்டு தடவையும் முயற்சி கைவிடப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் விரைவில் ஒரு ஒப்பந்தம் கைச்சாத்தாகும் என அரசியல் அவதானிகள் நம்புகின்றனர்.

(த-ப)



செல்வப் புதல்வன் மொகமட் ஜமீர்

இலக்கம் 49, டயஸ் பிளேஸைச் சேர்ந்த நிஸ்தார் — பஜீரா தம்பதிகளின் செல்வப் புதல்வன் மொகமட் ஜமீர் தனது முதலாவது பிறந்த தினத்தை 30–5–84 வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை உம்மா, வாப்பா, ஹனிபா அப்பா, சேக்காலி உம்மம்மா, மாமாமார்கள் ஜப்ரி, இஸ்மத், இம்தாஜ், இர்பான், இம்திசான், கண்டியைச் சேர்ந்த சயித் சாச்சா, ரியானா சாச்சி, தங்கச்சி, பண்டாரநாயக்க மாவத்தையைச் சேர்ந்த லத்திப் பெரிய வாப்பா, நஸீரா பெரியவும்மா, நஸ்ரினா தாத்தா, பர்மான் நானா, 2 ஆம் மாளிகாகந்தையைச் சேர்ந்த மொகமட் அப்பா, அயிஸா வாப்பும்மா, மாமிமார்கள் அஸ்வர், சாச்சா, நவைசா மதினி ஆகியோர் அல்லாஹ்வின் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துத் தெரிவித்துள்ளார்கள்.

## பிறந்த நாள் வாழ்த்து



நுஸ்ரத் சம்ஸாத்

வாழைத்தோட்டம், 32/15, அக்பர் லேன், கொழும்பு - 12 இல் வதியும் ஏ. எம். எம். முஸம்மில் — சம்ஸுன் நிஹாரா தம்பதிகளின் இரட்டைச் செல்விகளான நுஸ்ரத் பேகம் — சம்ஸாத் பேகம் தங்களது 3 ஆவது பிறந்த நாளை 31–5–84 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள்.

இவர்களை வாப்பா, உம்மா, வாப்பம்மாமார்கள் உம்மம்மா, அப்பா, சாச்சிமார்கள், சாச்சாமார்கள், மாமிமார்கள், மாமாமார்கள், துபாயிலிருக்கும் முஹிதீன் சாச்சா, நசீர் சாச்சா, சவூதியிலிருக்கும் அஸ்கர் அலி சாச்சா, பைரோஸ் சாச்சா, எலமல்தெனியவைச் சேர்ந்த அப்பா — உம்மம்மா, பெரியம்மாமார்கள், மாமா, காக்காமார்கள், நூருல் அஸ்மியா சாச்சி மற்றும் உறவினர்கள் இறைவன் அருளால் பல்கலையும் கற்று சீரும், சிறப்புடன் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்தினார்கள்.

வி. இ. 031602

## நெல் அவிக்க புதிய முறை

எளிதாக நெல் அவிப்பதற்காக, கட்டாக்கில் உள்ள அரிசி ஆராய்ச்சி நிலையம் புதியவகை டிரம் ஒன்றைக் கண்டு பிடித்து உள்ளது.

இதில் நெல்லை அவிக்கு முன்பு, அதை ஊறவைக்க வேண்டிய அவசியம் இல்லை. 75 கிலோ நெல்லை அவிப்பதற்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளது.

இதன் விலை 300 ரூபா அவித்த நெல்லை கொட்டுவதற்கு "டிரம்"மை தலைகீழாக கவிழ்க்க வேண்டியதில்லை, டிரம்மின் கீழ்புறம் உள்ள ஜன்னலைத் திறந்து விட்டால், அவித்த நெல் தானாக கீழே வந்து குவிந்து விடும். (ம—10)

# அள்ள அள்ளக் குறையாத வைன் உற்பத்தி!

## ஆஸ்திரியா விற்பனைக்கு இடம் தேடுகிறது!

ஆஸ்திரியர்கள் விழாக் காலங்களில் ஏராளமாக வைன் குடிக்கலாம் என்றாலும் அவர்களால் குளிர் காலத்திலும் குடித்து முடிக்க முடியாத அளவுக்கு வைன் சேமிப்பு இருக்கிறது.

அந்த நாட்டின் பிரபலமான வைட்லேபல் வைன் மட்டும் 60 லட்சம் லிட்டர் இருப்பில் இருக்கிறது. இதனை விற்று முடிக்க முடியாது என்னும் அச்சம் ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் பிரெஞ்சு வைன் பிரபல மடைந்து வருவதால் ஏற்பட்டிருக்கும்வர்த்தகப் போட்டியாகும்.

கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டின்போது சுமார் 3 லட்சம் லிட்டர் வைன் செலவழிந்திருக்குலாம் என்று வைன் விற்பனையாளர்கள் கருதுகின்றனர். இவர்குள் தலா 4 லிட்டர் வீதம் குடித்திருக்க வேண்டும். இந்த நாட்டின் மக்கள் தொகை 70 லட்சத்து 50 ஆயிரமாகும்.

குளிர் காலத்தில் ஆஸ்திரியர்கள் வைனைக் குடிப்பதிலும் இருப்பு முடியாது. ஆகவே அவர்கள் வைனுல் மூழ்கி அதனை வீணடிக்க வேண்டியிருக்கும் என்று ஒரு வர்த்தகர் குறிப்பிட்டார்.

ஆண்டுக்கு நபர் ஒன்றுக்கு 37 லிட்டர் வைனே செலவாகும் என்பதால் நம்மிடம் இருக்கும் வைன் சேமிப்பு 60 லட்சம் லிட்டராக இருக்கிறது என்று விவசாய அமைச்சில் வைன் தயாரிப்பு பிரிவின் இயக்குநராக இருக்கும் திரு. ராபர்ட் ஸ்டெய்னர் கூறினர்.

ஏற்றுமதி செய்யப்படும் வைனின் அளவு 4 லட்சம் லிட்டராகும்.

திராட்சை பயிரிடுவோர் தங்களது உற்பத்திப் பொருளின் விலையில் சரிவு ஏற்பட்டிருப்பதால் தங்களது உணவுக்கே சிரமம் ஏற்பட்டுள்ளதாகக் கருதுகின்றனர் என்றும் திரு. ஸ்டெய்னர் சொன்னர்.

சுமார் 85 வீதம் வெள்ளை வைன் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனை வியன்னுவுக்குத் தெற்கே வோஸ்லாவ், பாடின் மற்றும் வாச்சாவ் பகுதியின் மேற்கு திசையில் ஹங்கேரி எல்லை ஓரப் பகுதிகளான டானுபு, பர்கின்லேண்ட் ஆகிய இடங்களிலும் வைன் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த பகுதிகளில் போதுமான ஈரமும் சூரிய ஒளியும் கிடைக்கிறது என்றும் திரு. ஸ்டெய்னர் சொன்னர்.

கிறிஸ்து காலத்துக்கு முன்பிருந்தே டானுப் ஆற்றோரம் திராட்சை பயிரிடப்படுகிறது. இந்த பகுதி திராட்சைப் பயிருக்கு ஏற்ற சீதோஷ்ணப் பகுதியாகும்.

முன்பு வைன் தயாரிப்புக் கொத்தளம் என்று வர்ணிக்கப்பட்ட பழைய நகரே வியன்னு (வயின்) ஆகும். இங்கு தயாராகும் வைன் இன்னமும் ஜெர்மன் வைனுக்கு இணையாக இருந்து வருகிறது.

மற்றவர்கள் கேட்டுக் கொள்வதைப் போல் பிரெஞ்சு லேபிள் வைனுடன் இதனைக் கூட்டாக வர்த்தகத்துக்கு அனுப்புவது இதன் நீண்டகால கீர்த்திக்கும் வழக்கத்திற்கும் தகுதிக்கும் மாறுபட்ட செயலாக அமைந்து விடும் என்றும் திரு. ஸ்டெய்னர் கூறினர்.

ஆஸ்திரிய வைனில் பெரும் பகுதி மேற்கு ஜெர்மனிக்கு அனுப்பப்படுகிறது. இதற்குக் காரணம் இரு நாட்டிலும் பொது மொழி வழக்கத்தில் உள்ளதாகும். ஆனல் ஐரோப்பிய சந்தையில் இடம் பிடிப்பது சிரமமாக இருக்கிறது என்பதுடன் உலகில் அதிகமாக வைன் தயாரிக்கும் நாடுகளுடன் போட்டியிடுவதும் சிரமமாக இருக்கிறது.

1982ஆம் ஆண்டு வைனை சேமிக்க ஆஸ்திரியாவில் இடம் கிடைப்பது சிரமமாக இருந்தது. இப்பொழுது நாட்டில் ஆங்காங்கே வைன் சேமிப்புக்கான மாபெரும் கொள் கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 85 கோடி லிட்டர் வைனை பாதுகாக்க முடியும்.

1982, 83ஆம் ஆண்டுகளில் திராட்சை உற்பத்தி வளமாக இருந்தது. இதன் காரணமாக முறையே தோராயமாக 50 கோடி, 40 கோடி லிட்டர் வைன் தயாரிக்கப்பட்டது. இதன் உண்மையான அளவு மேலும் கூடுதலாக இருக்கலாம் என்றும் அவர் சொன்னர்.

1970 ஆம் ஆண்டுகளில் 30 லட்சம் லிட்டருக்கும் குறைவாகவே இந்த நாட்டில் வைன் உற்பத்தியாயிற்று.

ஆனல் இப்பொழுது திராட்சை உற்பத்தி 1,50,000 எக்கர் பரப்பில் பயிராவதும் திராட்சையில் இருந்து வைன் தயாரிக்கும் யுக்திகள் மேம்படுத்தப்பட்டுள்ளதும் இதன் உற்பத்தி உயர்ந்ததற்குக் காரணங்களாகியுள்ளன. உள் நாட்டில் மேலும் வைன் செலவழியும் என்று எதிர்பார்க்க முடியாது. இதனை ஏற்றுமதி செய்வதற்கான வழி வகைகளைக் காண வேண்டியிருக்கிறது என்றும் திரு. ஸ்டெய்னர் கூறினர்.

இப்பொழுது தரத்தில் உயர்வான வைனை தயாரிக்கவும் இதனை அமெரிக்கா மற்றும் ஜப்பானில் அதிகமாக விற்பதற்கான வழி வகைகளைக் காணவும் பிரெஞ்சு வட்டார வைன் அடைந்துள்ள பிரபல்யத்தை ஆஸ்திரிய ஒயினும் அடைய வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

ஐரோப்பிய சமூக நாடுகளுடன் கூட்டாக தரமான வைனைக் குறைந்த விலையில் விற்பதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் சொன்னர். ஆனல், நாங்கள் இதன் சரத்தை உயர்வாக வைத்திருப்பதையே விரும்புகிறோம் என்றும் திரு. ஸ்டெய்னர் சொன்னர்.

மொத்த வியாபாரிகள் தங்களது உற்பத்தி பாதிக்குமோ எனவும் அஞ்சுகின்றனர்.

"நீர் மது குடித்தால் இறப்பீர்; நீர் மது குடிக்கா விட்டாலும் இறக்கத்தான் போகிறீர்" என்று ஒரு புது மொழி கூறுகிறது.

இந்த வாசகத்தின் உட்பொருள் வைன் உற்பத்தியாளர்களுக்கு தொடர்ந்த ஒரு ஆறுதலாக இருந்து வருகிறது. (ம—சி)



கொத்துக் கொத்தாகத் தொங்கும் திராட்சைக் குலைகள்



பிரிட்டிஷ் முடிக்குரிய இளவரசரின் மனைவியாக இருப்பதில் டயானு சீமாட்டிக்குப் பெரும் கௌரவம்தான். ஆனல் அதே நேரத்தில் அவருக்கு அசௌகரியங்களும் இல்லாமல் இல்லை. ஏழு மாதக் கர்ப்பிணி ஆயிற்றே என்று அவரால் வீட்டில் ஓய்வெடுக்க முடிகிறதா? முக்கிய அரசாங்கவைபவங்களில் எல்லாம் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டியநிர்ப்பந்தம் அவருக்கு. "பிரிட்டிஷ் றேயல் அக்கடமி"யின் வருடாந்தஇரவு விருந்தில் கலந்து கொண்ட டயானு சீமாட்டி அக்கடமியின் தலைவர் சேர். ஹியூ காஸனுடன் இங்கு காணப்படுகிருர். தாய்மையின் செழுமையை அவரிடம் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது அல்லவா? (ம—சி)


பட்டம் தீட்டுவோரே!
மாணிக்கக் கற்களை செம்மையாக ஒப்பனை செய்யுங்கள்
வழமையான மெழுகிற்குப் பதிலாக
வீ.பீ.எம் VBM சுப்பர் சிமைன்ற
பாவியுங்கள்
வெப்பத்தைத் தாக்குப்பிடிக்கிறது.
வழுக்கல் அற்றது.
கெட்டியான பிடிமானம்
வீண் விரயம் குறைவு.
சிறிய கற்களுக்கு மிக அவசியம்
கால விரயம் குறைவு
நீடித்த பாவனையுடையது.
வியாபாரிகளின் விசாரணை கவனிக்கப்படும்
கிடைக்குமிடம்.
செலிங்கோ டயமண்ட் டிரேடிங் (பிரைவேற்) கம்பனி லிமிட்டெட்
7 ஆம் மாடி
செலிங்கோ ஹவுஸ், கொழும்பு 1
தொலைபேசி: 546203, 25621


## வாழை இலையைக் கழுவி

## டிக்கெட் இன்றி ரயில் பயணம்

## 108 பேருக்கு அபராதம்

கொழும்பு, ஜூன் 3

...னைக் குழு மேற்கொண்ட பரிசோதனை ஒன்றின் போதே இந்...

எனவும் தெரிய வந்தது.

மேற்படி 108 பேரில் 71 பேர்...

JEANS House Wives Choice

# வாழை இலையைக் கழுவி விற்றால் அதிக லாபம்!

விருந்தோம்பலுக்குப் பெயர் போன மதுரை மாநகரில் சமீப காலமாக சில அக்கிரமங்கள் நடந்து வருகின்றன.

கல்யாண வீடுகளிலும், ஹோட்டல்களிலும் பரிமாறப் படும் வாழை இலைகளை சிலர் ஆட்களை வைத்து மொத்தமாக எடுத்துக்கொண்டுபோய் கழுவி மறுபடியும் குறைந்த விலைக்கு ஹோட்டல்களுக்கு விற்கிறார்கள்.

மனச்சாட்சி உள்ளவர்கள் இந்த செயலை மன்னிக்க மாட்டார்கள். இந்த மாதிரி காட்டுமிராண்டித் தனத்தால் தொத்து வியாதிகள் பரவ வாய்ப்பு உள்ளது.

சில பேராசை பிடித்த ஹோட்டல் அதிபர்களும் இந்த நய வஞ்சக செயலுக்குத் துணை போகிறார்கள். என்று குற்றஞ் சாட்டப்படுகிறது. (ம–10)

---

# காலமானார்

## சின்னையா சுந்தரம்

அட்டன் குரங்குமலை தோட்டத்தைச் சேர்ந்த சின்னையா சுந்தரம் (1 – 6 – 1984) அன்று காலமானார்.

இவர் ராமாயின் அன்பு கணவரும், பத்மநாதன், புஷ்பநாதன், ஜயமோகன், (கங்காணி), பச்சமேனியன் ஆகியோரின் தந்தையும், பேரின்பநாயகி, காமாச்சி அம்மாள் ஆகியோரின் மாமனாரும், கணேசமூர்த்தி, ஸ்கந்தராஜா, ஜயா ஆகியோரின் அன்பு பாட்டனுமாவார். அன்னாரின் நல்லடக்கம் சனிக்கிழமை (2—6—1984) தோட்ட மயானத்தில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

— பத்மநாதன்.

---

# பேய் விரட்டிய வாணங்கள்!

2000 ஆண்டுகளுக்கு முன் சீனாவில் வெடிமருந்து கண்டு பிடிக்கப்பட்டது. வாணவெடிகள், மத்தாப்புக்கள் எல்லாம் அதன் தொடர்ச்சியாக வந்தவைதாம்.

ஆரம்பத்தில் வாணங்களை விழாக் கொண்டாட்டங்களில் மக்கள் உபயோகிக்கவில்லை. பேய் பிசாசுகளை விரட்டத்தான் அவை முதலில் பயன் படுத்தப் பட்டன. (ம–10)

---

கொழும்பு, ஜூன் 3

கொழும்பில் இருந்து அளுத்கமை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலில் டிக்கெட் இன்றிப் பிரயாணம் செய்த 108 பேருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

ரயில்வே திடீர் பரிசோதனைக் குழு மேற்கொண்ட பரிசோதனை ஒன்றின் போதே இந்தளவு பெரும் எண்ணிக்கையானோர் டிக்கெட் இன்றிப் பிரயாணம் செய்வது கண்டு பிடிக்கப் பட்டது.

இவர்களுள் 26 பேர் கொழும்பில் கடமையாற்றும் பெண்கள் எனவும் தெரிய வந்தது.

மேற்படி 108 பேரில் 71 பேர் அபராதப் பணத்தைச் செலுத்திய பின் விடுவிக்கப்பட்டனர். ஏனையோர் களுத்துறை மாஜிஸ்திரேட் நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர். (ப– ர)

---

# வானொலி

3—6—1984

காலை
- 5.30 நாதாஞ்சலி
- 5.35 தோத்திரமாலை – திரிபுர சுந்தரி நவரத்தின மாலிகா சுப்ரபாதம் எஸ். ஜானகி.
- 6.00 சைவநற்சிதனை
- 6.05 கிறிஸ்தவநற்சிந்தனை
- 6.10 பௌத்தநற்சிந்தனை
- 6.15 நன்னெறி ரி. ஆர். கள்ளபிரான்
- 6.30 செய்திகள்
- 6.50 மெல்லிசைப்பாடல்கள்
- 7.00 ஒன் வி கோ (ஆங்கில நிகழ்ச்சி)
- 7.30 மாகாணச்செய்திகள்
- 7.35 கிறிஸ்தவகீதங்கள்
- 8.00 துதிப்பாடற் பயிற்சி
- 8.15 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
- 8.45 மெல்லிசைப்பாடல்கள்
- 9.15 சங்கீதாமிர்தம்
- 9.30 இசைப்பயிற்சி
- 9.45 நாதவினோதம்
- 10.00 குதூகலம்
- 10.30 நேயர்கடிதம்
- 10.45 பூவையர் பூங்கா
- 11.15 சிறுவர் மலர்

மாலை
- 6.00 செய்திகள்
- 6.20 இப்தார் நிகழ்ச்சி
- 6.35 கோபுர தரிசனம்
- 7.05 முஸ்லிம்நிகழ்ச்சிகள்

இரவு
- 8.00 உலகச்செய்திகள்
- 8.10 கத்தோலிக்க நிகழ்ச்சி
- 8.40 கிறிஸ்தவகீதங்கள்
- 9.00 செய்திகள்
- 9.30 பாட்டு பொன். சுபாஷ் சந்திரன்.

# டெலிவிஷன்

## ரூபவாஹினி

- 5.30 சிறுவர் கதைகள்
- 5.55 "சைவநீதி" இந்து நிகழ்ச்சி
- 6.10 "கொரிய வாழ்க்கை" விவரணச் சித்திரம்
- 6.45 பியூசர் அட்ரக்சன்ஸ்
- 6.55 செய்திகள் – தமிழ்
- 7.15 நெத்சர
- 7.45 நெஸ்லே விளையாட்டுச் செய்திகள்
- 8.15 செய்திகள் – சிங்களம்
- 8.35 ஜனாதிபதியின் சீன, கொரிய விஜயத்தைக் குறிக்கும் நிகழ்ச்சி
- 9.30 செய்திகள் – ஆங்கிலம்
- 9.50 போகஸ்
- 10.00 பிக் வெளி
- 10.30 உலகச் செய்திகள்
- 10.35 பிக் வெளி தொடர்ச்சி

## ஐ. டி. என்.

- 6.01 ஏ.பி.சி, வைட் வேர்ல்ட் ஓப் (ஸ்போர்ட்ஸ்)
- 7.00 கோர்னெல்ஸ் கீதமாலா
- 7.15 ட டயிம் அன்ட் கிளோடியா
- 7.30 மியூஸிக் மிக்ஸ் இன்டர் நெஷனல்
- 8.00 த இன்க்ரடிபல் ஹல்க்
- 9.00 ரொக்பர்ட் பைல்ஸ்
- 9.30 செய்திகள் – ஆங்கிலம்
- 9.45 ரொக்பர்ட் வைல்ஸ் தொடர்ச்சி

---

# புனித ரமழான் சிந்தனைகள்

ஓர் ஆண்டுக்குப் பின்னர்......

மீண்டும் ஒருமுறை புனித மிக்க ரமழானைச் சந்திக்க பாக்கியம் அளித்த அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும். அல்ஹம்துலில்லாஹ்!

மாண்புறு ரமழான் மாதத்தில் நல்ல அமல்களைச் செய்து எம்மை நல்ல முஸ்லிம்களாக மாற்றிக் கொள்ள நாம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

"அல்லாஹ்வே" நான் இந்த அடியானைப் பகல் காலங்களில் சாப்பிடுவது, பருகுவது முதல் சரீர இச்சைகளைத் தடுத்துக் கொள்ளும்படி செய்துள்ளேன்!

ஆகவே எனக்காக இவனுடைய பாவங்களை மன்னித்தருள் என்று நோன்பு கூறும்.

அல்லாஹ்வே! நான் இந்த அடியானை இரவு நேரங்களில் உறங்காமல் தடுத்து வைத்து இருந்தேன். இந்த அடியான் அவ்வாறு நடந்து உள்ளான்.

ஆகவே இவனின் பிழைகளை எனக்காகப் பொறுத்தருள்! என்று திருக்குர்ஆன் கூறும்.

நாளை மறுமை நாளில் நோன்பும், குர்ஆனும் நல்லடியானுக்காக அல்லாஹுத்தஆலாவிடம் இவ்வாறு மன்றாடும். இதனை நோக்கும் நாம் ரமழான் எவ்வாறு எம்மைப் பண்படுத்தி நல்ல முஸ்லிம்களாக மாற்றுகிறது? என்று தெளிவுற உணரலாம்.

நல்ல கருமங்களை நிறைய நிறையச் செய்து ரமழானின் நன்மைகளைக் கொள்ளை கொள்ளையாக நாம் திரப்பிடிக் கொள்ள வேண்டும்.

"எங்கள் இரட்சகனே! எங்களுக்கு நீ இவ்வுலகில் நல்லதையே அளிப்பாயாக! மறுமையிலும் நல்லதையே அளிப்பாயாக! மேலும் நரகத் தீயில் இருந்து எம்மை காப்பாயாக (அல்குர்ஆன் 2:201)

"நற்கருமங்களைச் செய்யும்படி ஜனங்களைத் தூண்டுங்கள் தீமைகளை விட்டும் விலகுங்கள். இன்றேல் உங்களில் உண்டான தீயவர்களையே உங்களுக்குக் கேடாக அல்லாஹ் சாட்டி விடுவான்.

அப்போது உங்களுடைய பெரியவர்கள் பிரார்த்தனை செய்வார்கள். ஆனால் அப்பிரார்த்தனை அங்கீகரிக்கப்படாது. (அல்ஹதீஸ்)

அருள்மறையினதும், அல்ஹதீஸினதும் உயர் போதனைகளைப் பின்பற்றி நல்ல அமல்களைச் செய்து நலம் பெற முனைவோம்.

புனித ரமழானின் "ரஹ்மத்"தைக் கொண்டு அல்லாஹுத்தஆலா எமக்கு நற்பாதையைக் காட்டுவானாக. நேரிய நெறியில் ஒழுக கிருபை செய்வானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

— எப். எம். பைரூஸ்

---


# RADIO ELECTRONICS

ரேடியோ எலக்ட்ரோனிக் கல்வியை ஆரம்பத்திலிருந்தே தபால் மூலமாகவோ அல்லது வகுப்புகளுக்கு சமுகமளித்தோ பயிலுங்கள். நாட்டின் முன்னணி வானொலி தொழில் நுட்பக் கல்லூரியில் சேருங்கள் மதிப்புள்ள சான்றிதழ் DIPLOMA வழங்கப்படும். பயிற்சி உபகரணங்கள் இலவசம். நேரில் நடக்கும் வகுப்புகளுக்கு இரு பாலாரும் தற்போது அனுமதிக்கப்படுகின்றனர். தபாலில் பயில விரும்புவோர், முகவரி எழுதப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையை அனுப்பி விவரங்களை இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

புதிதாக ஆரம்பித்து சமுகமளித்து பயிலும் வகுப்புகளுக்கு ஒருசில மாணவர்களுக்கு மாத்திரமே இடமுண்டு. விவரங்களை நேரில் பெறலாம்.

**VEGAS ENTERPRISES**

203. Olcott Mawatha,
Bauddha Mandiraya Colombo — 11.



# JEANS

**House Wives Choice is Shobhas Sheets**
**Swiss Rose Orchids Sheets**

| | | |
|---|---|---|
| ஒற்றைப் படுக்கை | ரூ. | 97/50 |
| இரட்டைப் படுக்கை | ரூ. | 129/50 |
| தலையணை உறைகள் (பொருத்தமானவை) | ரூ. | 27/50 |
| டவல் செட்ஸ் (பொருத்தமானவை) | ரூ. | 129/50 |
| PILLOWS | | 39/50 |

**LEVI'S**

யூ. எஸ். ஏ. சான்பிரான்சிக்கோவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முதல்தரமான டெனிம்/கொட்ரெய் ஜீன்ஸ் ரூ. 490/ முதல் மற்றும் பொருத்தமான ஜீன்ஸ் வெயார்டு ஷேர்ட்டுகள் ரூ. 150/–. சாதாரணம்/நடுத்தரம்/பெரியது/ஆகப் பெரியது.

**SHOBHAS**

463. GALLE ROAD
COLOMBO. 3 DIAL. 81888



# குரேஸ் ட்ரவல்ஸ் சேவிசஸ் பிறைவேட் லிமிட்டெட்

(CROSS TRAVEL SERVICES (PTE) LTD.)

ஸ்தாபனத்தின் மற்றுமோர் புதிய முயற்சி!

குரேஸ் சர்வதேச தொலைத் தொடர்பு சேவை

CROSS INTERNATIONAL TELECOMMUNICATION SERVICES,

ஜூன் 1ஆந் திகதி முதல்

மங்களகரமாக ஆரம்பம்

வெள்ளிக்கிழமை ஆனி மாதம் 1984 ஆம் ஆண்டு (01–06–1984) நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும் என்பதை வாடிக்கையாளருக்கும், பொதுமக்களுக்கும், நண்பர்களுக்கும் அறியத் தருகின்றோம். அவ்வையம் யாவரையும் எமது வர்த்தக நிலையத்திற்கு சமுகம் தருமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

FOR ALL INTERNATIONAL AND LOCAL DIRECT DIALLING TELEPHONE CALLS
INTERNATIONAL TELEX SERVICES.
NO DELAY AT ALL. CHEAP RATES.
CONTACT US RIGHT NOW.

குரேஸ் சர்வதேச தொலைத் தொடர்புச் சேவை
நேரம் பொன்னானது.
சர்வதேச உள்ளூர் நேரடித் தொலைத் தொடர்புச் சேவை
சர்வதேச ரெலெக்ஸ் சேவை

உலகில் எப்பாகத்திற்கும் குறைந்த கட்டணத்தில் நேரடிச் சர்வதேச தொலைத் தொடர்புச் சேவையையும் ஒரு நொடிப் பொழுதில் பெற்றுக் கொள்ள உடன் எங்களை நாடுங்கள்.

இரவு — பகல் சேவை!

CROSS INTERNATIONAL TELECOMMUNICATION SERVICES
STAGE II, FIRST FLOOR,
NEW BUS STAND CENTRE ROAD,
MODEL MARKET, JAFFNA.
PHONE NO: 22040. 22065. TELEX NO: 22207 (C.T.S.) CE

பலரசத் திரட்டு

# கோதுமையில் 30,000 இனங்கள்!

கோதுமை மாவிலிருந்து பல்வேறு விதமான சிற்றுண்டி வகைகளைத் தயாரிக்கலாம். ஆனல் கோதுமையிலேயே 30,000 இனங்கள் இருக்கின்றன என்பது தெரியுமா?

பிஸ்கோத்து, ரொட்டி, பூரி, சப்பாத்தி முதலியவை உங்களுக்குப் பிடித்தமான உணவுப் பண்டங்கள் அல்லவா? இவற்றைக் கோதுமையைக் கொண்டு செய்கிருர்கள். சேமியா, ரொட்டி, கேக் முதலியவை செய்யவும் கோதுமை பயன்படுகிறது. உடல் சக்திக்குத் தேவையான கார்போ ஹைட்ரேட்டுகள், உடல் வளர்ச்சிக்கான புரதம் முதலிய சத்துப் பொருள்கள் கோதுமையில் நிறைந்துள்ளன.

கோதுமை 7,000 அண்டுகளுக்கு முன்பிருந்தே பயிர் செய்யப்பட்டு வந்திருக்கிறது. இது இந்தியா, அபிசீனியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து மற்ற நாடுகளுக்குப் பரவிற்று. இன்று உலகில் மிகுதியாகப் பயிர் செய்யப்படும் உணவுத் தானியம் கோதுமை. அரிசிக்கு அடுத்தபடியாக மிக அதிக அளவில் கோதுமையை மக்கள் உண்கின்றனர்.


கோதுமைப் பயிருக்குச் செழிப்பான மண் தேவை. வயலில் தண்ணீர் தேங்கக் கூடாது. வெப்பமும் அதிகம் இருத்தலாகாது. உலகின் பெரும் பகுதியில் இத்தகைய சமதட்ப வெப்ப நிலை நிலவுவதால், அங்கெல்லாம் கோதுமை பயிராகிறது.

அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, சீனு, கனடா, அர்ஜென்டீனு, இந்தியா, பிரான்ஸ் முதலிய நாடுகளில் கோதுமை அதிகமாகப் பயிராகிறது. இந்தியாவில் உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான், மகாராஷ்டிரம், பீகார் ஆகிய மாநிலங்களில் கோதுமை பயிராகிறது. இன்றைய புதுமுறை வேளாண்மையின் பயனுகத் தமிழ் நாட்டிலும், மற்றும் சில மாநிலங்களிலும் கோதுமை விளைகிறது. இந்தியாவில் பாதிக்கு மேற்பட்ட மக்களின் முக்கிய உணவு கோதுமைதான்.

கோதுமையில் 30.000 இனங்கள் உள்ளனவாம்! இவற்றில் வெள்ளை, மஞ்சள் சிவப்பு முதலிய நிறங்களும், மிருது, கடினம், மிகக் கடினம் எனப் பல தரங்களும் இருக்கின்றன. இவற்றுள் ரொட்டிக் கோதுமை, சேமியாக் கோதுமை, கூம்புக் கோதுமை, குள்ளக் கோதுமை, எம்மர் கோதுமை, ஆகியவை முக்கியமானவை. இந்தியாவில் ரொட்டிக் கோதுமையும், சேமியாக் கோதுமையும் பயிராகின்றன.

(ம— சி)

## இது என்ன புள்ளி?



இது என்ன, உடைந்த கண்ணுடியா? கிழிந்த கம்பளமா? தரையில் போடப்பட்ட ஒரு துவாரமா? இவை எதுவுமே இல்லை. சூரியனில் உள்ள ஒரு கரும்புள்ளி. இதைப் போல் எண்ணற்ற புள்ளிகள் சூரியனில் இருக்கின்றன.

(ம-10)



நண்பன்: எனக்கு எங்கேடா இந்த ஜென்மத்தில் கலியாணம் நடக்கப் போகுது........

மற்றவன்: ஏண்டா உனக்கு அழகில்லையா, படிப்பில்லையா, குணம் இல்லையா......

நண்பன்: எல்லாம் இருக்குடா, கூடவே நாலு தங்கச்சிமாரும் இருக்காங்கடா.....



அவள்: நீங்கள் என்னைக் கைவிட மாட்டீர்களே......?

அவன்: வேருெருவன் மணவறையில் உன்னைக் கைப்பிடிக்கும் வரை கைவிட மாட்டேன் என் கண்ணே.........



நடிகை: இவரோட எனக்கு நடிக்க முடியாது சார்......

டைரக்டர்: ஏம்மா அப்படிச் சொல்றே......?

நடிகை: பின்ன என்ன சார்... காதல் காட்சியில கொஞ்சங் கூட தத்ருபமாக நடிக்கமாட்டேங்குரு.........

## பந்து விளையாடும் பலே குரங்குகள்



அமெரிக்காவில் "சிம்பன்சி" குரங்குகள் நன்ருகப் பந்து விளையாடுகின்றன. "சாக்கர்" என்ற கால் பந்தாட்டத்தில் இந்தக் குரங்குகள் பலே நேர்த்தியாம். இந்தக் குரங்குகள் கோல்போஸ்ட்டை நோக்கி வீசும் பந்துகள் குறி தவறுவதே இல்லை. நடுவில் உள்ள "ஷான்" என்ற குரங்கு மிகவும் தந்திரமாக விளையாட்டை விளையாடி வெற்றி பெறுகிறது. இதைக் காண பெரியவர்களும், சிறுவருடன் முண்டியடித்து வருகின்றனராம். ஷானுவை உலக கப்பிற்காக விளையாட விட்டால் கட்டாயம் அதுதான் வெற்றி பெறும் என்கிருர் காப்பாளர் மைக்.

(ம— 10)


## தண்ணீரிலும் விமானம் ஓடும்

தரையில் இறங்கி ஏறும் விமானங்களைத் தான் பார்த்து இருக்கிரேம். தண்ணீரில் இறங்கிப் படகு மாறி சென்று விட்டு பின் நீரிலேயே சறுக்கிக் கொண்டு மேலே ஏறி பறந்து விடும் விமானங்களை விரைவில் எதிர்பார்க்கலாம்.

டி. ஓ. 24 டி டி எனப்படும் இந்த விமானத்தின் வேகம் மணிக்கு 400 கிலோ மீட்டர்!

(ம—10)

## உல்லாச சவாரி!




அதிசய வாகனங்களின் மியூசியம் ஒன்று ஹோலந்து நாட்டில் உள்ளது. இங்கு பலவகையான அதிசய வாகனங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இங்கு அதிசய சைக்கிள் ஒன்று உள்ளது. இதைப் படுத்துக் கொண்டே உல்லாசமாக ஓட்டலாம். இதைச் செய்தவர் ஜப்பானில் உள்ள ஹோண்டா பாக்டரியில் வேலை பார்க்கும் "லின்ஸ் சிம்ஸ" என்பவர். வேண்டாத வாகன உதிரிப் பாகங்களைக் கொண்டு இதை உருவாக்கிளுராம்.

சைக்கிள் ஓட்ட பாலன்ஸ் செய்ய வேண்டிய அவசியமே இல்லாமல் யார் வேண்டுமானலும் படுத்துக் கொண்டே ஓட்டலாம். ஆனல், ஒரு பெரிய கஷ்டம் என்னவென்ருல், இதை ஓட்டும் போது நாம் எங்கே போகிருேம் என்றே தெரியாது, இலக்கு இல்லாமல் ஓட்டிச் செல்ல வேண்டியதுதான்!

(ம-10)

## இறந்த பின்னரும் பயன்



## நடிகையின் மோசடி!


அண்மையில் மதுரையில் நடந்த ஒரு இசை விழாவில் நடிகை அருந்ததி பிரமாதமாய்ப் பாடினர். அருந்ததி இவ்வளவு அருமையாகப் பாடுகிருரா என ரசிகர்களுக்கு சந்தேகம்.

## சந்திரனில்

## நீரிழிவினுல் கருச்சிதைவு

பெண்களுக்கு கருச்சிதைவு

தென்னம்பிள்ளை



அருமையாகப் பாடுகிறாரா என ரசிகர்களுக்கு சந்தேகம்.

உற்று கவனித்தபோது மேடையில் அருந்ததி வாய் அசைக்க மேடைக்குப் பின்னே இன்னொரு பெண் பாடுவது தெரிந்தது. அவ்வளவுதான்.

ரசிகர்கள் ஆவேசம் கொண்டனர். முடிவில் அருந்ததி மன்னிப்பு கேட்டுக் கொண்டார்.

(ம-10)

தத்ரூபமாக நடிக்கமாட்டேங்கறாரு......

## சந்திரனில் மனிதனின் எடை

சந்திரனில் ஈர்ப்புச் சக்தி குறைவு. இதனால், பூமியில் 180 இருத்தல் எடையுள்ள ஒரு மனிதன் சந்திரனில் இறங்கியதும் முப்பது இருத்தல் எடையே இருக்கிறன்.

(ம-10)

## கருச்சிதைவு

பெண்களுக்கு கருச்சிதைவு ஏற்பட நீரிழிவும் ஒரு காரணம் என்று இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கருச்சிதைவு, குறைப் பிரசவம் ஏற்பட்ட 100 பெண்களைப் பரிசோதித்ததில் அவர்களில் 40 பேர் நீரிழிவு நோயாளிகள் என்பது தெரிய வந்துள்ளதாம்.

(ம-10)

## சோதனைக் குழாய் மூலம் உற்பத்தி!

சோதனைக் குழாயில் பிள்ளை மாத்திரமா உற்பத்தி செய்யலாம்? தென்னம்பிள்ளையும் உற்பத்தியாகிறது.

சோதனைக் குழாயில் கருத்தரிக்கச் செய்து குழந்தைகள் பிறக்கச் செய்வதை அடுத்து இப்போது சோதனைக் குழாயில் "திசுக்கள் இணைப்பு" — வளர்ப்பு முறைப்படி தென்னங் கன்றுகள் வளர்க்கப்படுகின்றன!

இந்தியாவில் கேரள விவசாயப் பல்கலைக்கழகம் இதற்கான திட்டத்தைத் தீட்டியுள்ளது. இதன்படி சோதனைக் குழாய்களில் பெரும் எண்ணிக்கையில் தரமான தென்னங் கன்றுகள் வளர்க்கப்படும். இத் திட்டத்திற்கு ரூபா 8 லட்சம் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டு, இந்திய விவசாய ஆராய்ச்சி கவுன்சில் அனுமதியும் கோரியுள்ளது.

குறுகிய காலத்தில் சோதனைக் குழாய் முறை மூலம் அதிக எண்ணிக்கையில் தென்னங் கன்றுகள் வளர்க்கப்படலாம் என்றும், இதனால் தென்னங் கன்றுகள் வளர்க்க அதிக எண்ணிக்கையில் தேங்காய்களை உபயோகிப்பதைத் தவிர்க்கலாமென்றும் கூறப்படுகிறது.

இந்தத் "திசுக்கள் இணைப்பு" முறையை பலவிதமான பூ, கனிவகை செடிகள் தயாரிப்பதிலும் பயன்படுத்தி கேரள விவசாய பல்கலைக்கழகம் வெற்றி கண்டுள்ளது. இந்த முறைப்படி வளர்ந்த செடிகளுக்கு இயற்கையான முறையில் வளரும் செடிகளை விட நோய்களை எதிர்த்து வளரும் சக்தி அதிகமென்றும் கூறப்படுகிறது.

(ம-9)

...ணியில் தொங்கும் இவை அனைத்தும் அமெரிக்காவில் உள்ள மோட்டார் கார் தயாரிக்கும் நிறுவனத்தின் உயிரற்ற மாடல்கள் ஆகும். ஒவ்வொரு கார் தயாரிப்பு நிறுவனத்திலும் "பாதுகாப்பு ஆராய்ச்சிப் பகுதி" ஒன்றுண்டு. பலதரப்பட்ட உயிரற்ற மனித உருவ மாடல்களை காரினுள் அமர்த்தி, நுண் அணு முறையினுல் காரை இயக்கி ஒன்றோடொன்று மோத விடுவர். இந்த மாதிரியான மோதல்கள் மக்களை எந்தவிதத்தில் எல்லாம் தாக்குகின்றன என்று மாடல்கள் வாயிலாக கவனித்து அதற்குப் பாதுகாப்புக் கொடுக்கும் வகையில் கார்களை மாற்றுகின்றனர். சரி, இந்த மாடல்கள் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றன தெரியுமா? இறந்தவர்களின் உடல்களை வாங்கி, பக்குவம் செய்து அதையே உபயோகம் செய்கின்றனர்.

(ம-10)

# உயிரோடு இருப்பவருக்கு நினைவுக் கல்வெட்டு!

பாரிஸ் நகர தலைமைப் போலீஸ் அலுவலகச் சுவரில் இப்படி ஒரு கல் வெட்டு:—

"இங்கு ஆர்மாண்டு பாக்கரும், மாரிஸ் கிரேயாசியசும் ஜெர்மானியரால் சுட்டுக் கொல்லப் பட்டனர்!"

ஆனால் நாஜிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஆர்மாண்டு பாக்கர்; இன்னும் உயிரோடுதான் இருக்கிறர்! இந்தக் கல்வெட்டுக்கு மிக அருகிலேயே தனது அலுவலகத்தில் அவர் பணியாற்றிக் கொண்டிருக்கிறர்!

இந்தப் புதுமை எப்படி ஏற்பட்டது என்கிறீர்களா?

இரண்டாம் உலகப்போர் இந்த உலகிலே ஏற்படுத்தி விட்டுப் போன எத்தனையோ நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்று!

வரலாற்று ஏடுகளைத் தங்களது காலடியில் போட்டு கண்டபடி கிறுக்கி விட்டுச் சென்ற "பெருமை" ஹிட்லருக்கும்; அவனது நண்பர்களுக்கும் உண்டு! "பாரிஸ் பற்றி எரிகிறதா?" என்ற நூல் நாஜிகள் பற்றி பல சுவையான தகவல்களைத் தருகிறது! அவைகளில் ஒன்று தான் ஆர்மாண்டு பாக்கரின் கதை!

1944 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 ஆம் நாள்! நாஜிகளின் வசமிருந்த பாரிஸ் மத்திய பொலீஸ் தலைமை நிலையத்தை, ஆர்மாண்டு பாக்கரின் தலைமையில் பிரெஞ்சுப் பொலீஸார் தாக்கினர். அந்தக் கடுமையான சண்டையில் பாக்கரும், மற்றொரு பொலீஸ்காரரான மாரிஸ் கிரேயிசியசும் நாஜிகளிடம் சிக்கினர். அவர்களை அங்கேயே சுட்டுக் கொன்றுவிட ஜெர்மானிய வீரர்களுக்கு உத்தரவிடப்பட்டது.

பொலீஸ் தலைமை நிலையச் சுவர் முன்னர் இருவரையும் நிற்கவைத்துச் சுட்டார்கள். ஆனல் பாக்கரைச் சுட்டவனது குறி தவறிவிட்டது. தந்திரசாலியான பாக்கர், தானும் குண்டடிபட்டு வீழ்ந்தவர்போலவே தரையில் விழுந்து விட்டார்!


சுட்டவர்களுக்கு என்ன அவசரமோ! அவர்கள் பிணங்களைப் பரிசோதிக்கவில்லை. தன்னருகே இரத்த வெள்ளத்தில் பிணமாகக் கிடந்த மாரிஸ் கிரேயிசியசுக்காக இரண்டு துளி கண்ணீரைச் சிந்திவிட்டு மெதுவாக அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார் பாக்கர்!

பொலீஸ் தலைமை நிலையச் சுவரில் உள்ள கல்வெட்டில் இப்போது புதிய திருத்தம் ஒன்றைச் செய்திருக்கிறர்கள். என்ன தெரியுமா? "இங்கு ஆர்மாண்டு பாக்கரும்; மாரிஸ் கிரேயிசியசும் ஜெர்மானியரால் சுடப்பட்டனர். அதில் பாக்கர் உயிர் பிழைத்தார்! கிரேயிசியஸ் உயிரிழந்தார்?"

ஆர்மாண்டு பாக்கரின் அன்றாட வேலைகளில் ஒன்று, அந்தக் கல்வெட்டைப்போய் பார்த்துப்படிப்பது! அதன்முன் இரண்டு நிமிடங்கள் அமைதியாக நின்று கொண்டிருப்பது!

(ம-21)


## வீதியில் செல்கின்ற போது வரும் சோதனை



ஜோர்தானின் மேற்க்கரைப் பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள இஸ்ரவேல் துருப்புகள் உள்ளூர் வாசிகளுடன் மிகவும் கடுமையாகநடந்து கொள்வதாகப் புகார் கூறப்படுகிறது. இரு உள்ளூர் இளைஞர்கள் வீதியில் சென்று கொண்டிருந்தபோது அவர்களைஇரு இஸ்ரவேல் இராணுவ வீரர்கள் பரிசோதிக்கும் இந்தக் காட்சியை ஐ. நா. அவதானி ஒருவர்படம் பிடித்துள்ளார். இந்த இரு இளைஞர்களும் பரிசோதனையின் பின் கடுமையான தாக்குதலுக்குள்ளானர்கள் என்று அந்த அவதானி தகவல் தருகிறர்.

(ம-9)

## மிருக குணம் எங்களுக்கு இன்னும் இல்லை



மிருகங்களாக இருந்தாலும் இளம் வயதில் அவற்றிற்கு மிருக குணம் வருவதில்லை. வளர்ச்சி அடைய அடையத் தான் அவை மனிதனைவிடக் கொடிய குணம் கொண்டவையாக மாறுகின்றன. தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையில் ஒரு ஓநாய்க் குட்டியும் சிறுத் தைக் குட்டியும் எத்தனை அந்நியோன்யத்துடன் பழகுகின்றன பார்த்தீர்களா!

(ம-9)

# வீட்டுக்கு ஒரு "புகைஞன்" இருந்தால் போதுமே...!

புகை பிடிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் காலம் இது- இந்த வேளையில் வீட்டுக்கு ஒரு "புகைஞன்" இருந்தால் போதும் முழு வீட்டாருக்குமே அனர்த்தம் ஏற்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

"சட்டபூர்வமான எச்சரிக்கை — சிகரெட் பிடித்தல் உடல் நலத்திற்குத் தீங்கானது" என்ற வாசகம் சிகரெட் விளம்பரங்களோடு நம் கண்களில் படுகிறதல்லவா?

இந்த வாசகம் ஆண்களின் கண்களில் மட்டுமல்ல, பெண்களின் இதயத்திலும் பதியவேண்டும்.

மேலைநாட்டில் நான்கு பிள்ளைகளுக்குத் தாயான ஒரு நடுத்தர வயதுள்ள மாது. ஒருநாள் திடீரென்று அவளுடைய கணவன் நெஞ்சு வலிகிறது என்றான்.

அவனை உடனே மருத்துவ மனைக்குக் கூட்டிச் சென்றாள். டாக்டர்கள் பெரிதும் முயன்று பார்த்தனர். ஆனால், எமனின் பாசக் கயிறு வலிமை பெற்றது போலும். அவன் மறுகணமே மரணமாகி விட்டான். அப் பெண்ணிற்கோ பெருத்த அதிர்ச்சி!

ஒருவாறு தன் மனதைத் தேற்றிக் கொண்டு டாக்டரை அணுகி, "எனது கணவர் எதனால் இறந்தார் டாக்டர்?" என்றாள்.

"உங்கள் கணவர் சிகரெட் புகைப்பதுண்டா?" என்று திருப்பிக் கேட்டார் அவர்.

"ஆமாம், தினமும் காய்கறி வாங்கி வரும் போதெல்லாம் நான்தான் அவருக்குத் தேவையான சிகரெட் வாங்கிக் கொடுப்பேன்" என்று அந்த அபலை பதிலுரைத்தாள்.

"அப்படியா? பேஷ்! அவருடைய உயிரைக் குடித்தவள் உன்னையன்றி வேறு யாருமில்லை அம்மா" என்றார் டாக்டர்.

வெந்த புண்ணில் வேலெனப் பாய்ந்தன அச் சொற்கள். அசைவற்று நின்ற அவள், தன்னையே நொந்து , கொண்டாள். தனது அருமை நாயகனின் சொற்ப ஆயுளுக்குத் தானே முழுப் பொறுப்பு என்பதை அவளால் எண்ணிப் பார்க்காமலிருக்க முடியவில்லை.

அன்றே அப் பெண்மணி ஒரு சபதம் மேற்கொண்டாள். தனது பிள்ளைகள் நால்வரையும், சிகரெட்டின் மீளாப் பிடியில் இருந்து பூரணமாய் விலக்கியே தீருவதென்ற சபதமே அது.

விடா முயற்சியின் பயனாய், தன் மக்களைப் புகை பிடிப்பதிலிருந்து விடுவித்ததோடு அல்லாமல் பிற மக்களிடமும் சிகரெட்டின் தீமைகளை எடுத்துரைத்துப் பலரை அக் கொடிய பழக்கத்திலிருந்து மீட்டு வருகிறாள் அப் பெண்மணி.

மேலை நாட்டில் மட்டுமல்ல, நம் நாட்டிலும் அறிந்தோ அறியாமலோ, ஆண்கள் புகை பிடிப்பதைப் பற்றி பாரா முகமாக கவலையற்று இருக்கும் பெண்கள் பலர் உள்ளனர். அப்படிப்பட்ட பெண்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை இவை:—

நிறையப் புகைக்கும் ஒருவனின் வாயிலிருந்து வீசும் துர்நாற்றத்தை மோப்பம் பிடித்து விட்டால் பச்சிளம் குழந்தைகளும் அவனிடம் நெருங்காமல் விலகிச் செல்லும்.

அதிகமாய்ப் புகைப்பவனின் உடலில், நீரில் வாழும் அட்டையை ஒட்டிக் கொள்ளச் செய்யுங்கள். அது அவன் இரத்தத்தை உறிஞ்சினால், விஷமேறி வெகு சீக்கிரத்தில் செத்து விடும்.

வீட்டில் தகப்பனோ, கணவனோ, சகோதரனோ சிகரெட் பிரியராய் இருந்து விட்டால், அந்த வீட்டாருக்கே அனர்த்தம் தான்

ஏன்? அந்த நபர் தனது படுக்கை அறையிலும் புகைப்பார் அல்லவா? அப்போது அங்கே புகை மண்டிவிடும். ஒரு பாவமும் அறியாத அவருடைய குழந்தைகளும், மனைவியும், சுற்றமும் அதைச் சுவாசித்து மேற்கூறிய நோய்களுக்கு ஆளாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

(ம- சி)

## யானைகளை ஆட்டி வைக்கிறாள் ஒரு சிறுமி!



யானையைப் பிடித்து அடக்கிப் பழக்குபவர்கள் பெரும்பாலும் ஆண்களே! பெண்கள் யானைப் பாகர்களாக இருப்பதில்லை. ஆனால் ஏழு வயதான ஒரு சிறுமி யானைகளைப் பிடித்து அடக்கிப் பழக்குகிறாள். கூரிய தந்தம் கொண்ட யானைகளும் இந்த சிறுமிக்குப் பணிவது வியப்பாக இருக்கிறது. ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த "மெரின் மக்" என்ற இச் சிறுமியின் தந்தை எல்லாவித மிருகங்களையும் அடக்குவதில் வல்லவர். தென் ஆபிரிக்காவில் உள்ள ஒரு சர்க்கஸ் கம்பெனிக்காக தற்போது இவர் யானைகளைப் பழக்குகிறாராம்! அவருக்கு உதவியாக இருக்கிறார் சிறுமி.

(ம-10)

## மகாராணிக்கும் பணக்கஷ்டம்!

"விலைவாசி ஏறி விட்டது. என்ன செய்வது? சில அனாவசிய செலவுகளை குறைக்க வேண்டும்" என்று நாம் பொதுவாக கவலைப்படுவதுண்டு.

இதே நிலைமை இங்கிலாந்து ராணிக்கும் அவர் குடும்பத்தினருக்கும் ஏற்பட்டு உள்ளது. ராணியின் செலவுக்காக இங்கிலாந்து பார்லிமெண்ட் ஒதுக்கிய தொகை ஒரு வருடத்திற்கு ரூ. 47 லட்சமாம்.

அதனுள் அரச குடும்பத்தினர் இளவரசர் சார்ள்சை தவிர தங்கள் செலவுகளை அடக்க வேண்டும். சார்ள்சுக்கும். டயானாவுக்கும் மட்டும் கார்ன்வால் என்ற ஊரிலிருந்து வரும் வரிப் பணம் செலவுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.


(ம-10)

## பூமியின் பிரயாணம்

பூமி, சூரியனைச் சுற்றி வர 365 நாட்கள் ஆகின்றன. ஆனால் மற்ற கோள்கள்?

* புதன் — 88 நாட்கள்
* வெள்ளி — 225 நாட்கள்
* செவ்வாய் — 287 நாட்கள்
* வியாழன் — 12 ஆண்டுகள்
* சனி — 28 ஆண்டுகள்
* யுரேனஸ் — 84 ஆண்டுகள்
* நெப்டியூன் — 165 ஆண்டுகள்.

(ம-10)





ஒருவர்: உங்க மனைவியும், நீங்களும் தினம் சண்டை போடு...




ஒருத்தி: உங்க தெருக் கோடியில உள்ள வீட்டுக்கு காலையில ஆரோ புதுசாக் குடிவந்திருக்...

## திகைக்கும் அழகி இவர்



## வீட்டுவேலைகள் அனைத்தையும்



ஒருவர்: உங்க மனைவியும், நீங்களும் தினம் சண்டை போடு றீங்களே, எப்பவாவது ரெண்டு பேரும் சந்தோஷமாக இருந் ததுண்டா.........

மற்றவர்: ஓ...... யெஸ்...... கலியாணத்துக்கு முன்னடி லவ் பண்ணும் போது எவ்வளவு சந் தோஷமாக இருந்திருக்கிறம் தெரியுமா.........

...யில உள்ள வீட்டுக்கு காலையில ஆரோ புதுசாக் குடிவந்திருக் காங்களாமே......

மற்றவள்: ஆமாண்டி.... ஐம் பது வயசில ஒருத்தர், அவர் பெண்சாதிக்கு நாப்பத்தாறு வயசாம், அஞ்சு பிள்ளைகள், இப்பவும் ஒண்டரை மாசம் குழந்தை உண்டாகியிருக்கிரு வாம்.........


## விதைக்கும் புதுவகைக் கருவி

நிலத்தில் விதைகளைத் தூவு வதற்கு புதுவகை கருவி ஒன்று கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது.


ஒரு விதை நன்ருக வளர பூமி யில் எந்த ஆழத்திற்கு புதைக்க ப்பட வேண்டுமோ அந்த ஆழத் திற்கு சிறிது குறையாமல், இந்த இயந்திரத்தைப் பயன் படுத்தி விதைகளை விதைக்கலாம்.

இதில் உள்ள மீட்டர் மூலம், எத்தனை விதைகள் விதைக்கப் பட்டு உள்ளது, என்பதையும் எளிதாகக் கண்டு கொள்ள லாம்.

விதை விதைக்கும் பணியில் 5 ஆட்கள் செய்யும் வேலையை ஒரே நாளில் இந்த கருவியின் உதவியால் ஒருவர், செய்து முடித்து விடலாம். (ம-10)



## பறவை விரட்ட வந்த அழகி ஆடை களைந்து நிற்பது சரியா?



வெறும் உள் காற்சட்டை அணிந்து, மேலாடையின்றி வெட்கமில்லாமல் நிற்கும் இந்தப் பெண்ணின் பெயர் அலிஸ். நம்மூரில் பறவைகளை விரட்ட வயலின் நடுவே சோளக் கொல்லை பொம்மை வைப்பது போல், அமெரிக்காவில் இப்படி ஒரு அழ கிய சோளக் கொல்லை பொம்மையை உருவாக்கி வைத்துள்ள னர் அமெரிக்கர்கள் எந்த விஷயமானுலும் புதுமையாகச் செய் வதில் வல்லவர்கள்தான். ஆனுல் இவ்விதம் செய்ததால் பெண் மைக்கே இழுக்கு ஏற்பட்டு விட்டதென்று எதிர்ப்புத் தெரிவிக் கப்பட்டதால் தற்போது அழகிக்குச் சட்டையை மாட்டி விட்டி ருக்கிருர்கள்.

(ம-10)



சிலர் வாயினுல் தீகக்குவது வழக்கம். ஜீன் அாப்மேன் என் னும் இந்த அழகியோ உண்மையிலேயே தீகக்குகிருர். ஆம்! தீயுடன் விளையாடுவதுதான் இந்த சர்க்கஸ் அழகியின் தொழில். (ம-10)

## அழகான சிறுத்தை!

உலகிலுள்ள சிறுத்தைப் புலி களில் அழகானவையும் நீள மானவையும் ஆபிரிக்கச் சிறுத்தைகள் தாம்,

அலினேனீக்ஸ் ஜூபாடஸ் என்ற விலங்கியல் பெயர் கொண்ட இந்தச் சிறுத்தைகளின் பூர்வீகம் ஆபிரிக்கா. ஆனுல் அங்குள்ள காடுகளில் சுமார் 55 சிறுத்தைகள் மட்டுமே காணப்படுகின்றன. இனப் பெருக்கத்திலும் இவை அதிகம் ஈடுபடுவதில்லை. (ம-10)

## தமது தலையில் போடுகிறார் ஒரு பிரதமர்!

நாட்டுக்குப் பிரதமரானுலும், வீட்டுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை அவர் மறப்பதில்லை. வீட்டு வேலைகள் அனைத்தையும் தன் தலையில் போட்டுக் கொள்கிருர். தன்னுடைய வீட்டுக்கு வெள்ளை அடிக்கும் வேலையையும் அவரே செய் கிருர் பிரிட்டிஷ் பிரதமர் மார்கரெட் தாட்சர் தான் அவர்.

தானே உணவு சமைப்பது, உண்பதுதான் இவ ருக்குப் பிடிக்குமாம். சமையல் அறை அலுமாரிகளை வாரத்திற்கு ஒருமுறை இவரே சுத்தம் செய்கிருர்.

தாட்சரின் எளிமை இங்கிலாந்தையே கவர்ந் துள்ளது. இவருக்கு வீட்டில் வேலையாட்கள் வைத் துக் கொள்வது பிடிக்காது. ஒருநாளில் இவர் தூங்குவது 5 மணி நேரம்தான். தூங்கப் போவ தற்கு முன்பு ஒரு மர்ம நாவல் சிறிது நேரம் படிப் பார். காலையில் உணவே உண்பது கிடையாது. இவர் உடல் பருமனுக ஆகாமல் இருப்பதற்கு இதுவே காரணம்.

காலையில் வெறும் பால் அருந்துவதோடு சரி. மதியம் மீன், காய்கறிகள், ஆட்டுக் கறி ஆகியவை. அரசாங்க விருந்துகளிலும் மிதமாகத்தான் உணவு உண்பார்.

இவர் எப்போதாவது குடிப்பதுண்டு. அது வும் மிதமாக. ஆனுல் நாடாளுமன்றத்தில் பேசும் போது நிறையத் தண்ணீர் அருந்துவார். வருடத் திற்கு இருமுறைதான் உடைகள் வாங்குகிருர். வாரம் ஒருமுறை முடி வெட்டிக் கொள்கிருர். நகைகளைப் பெரும்பாலும் அணிவதே இல்லை. (ம- 10)



பிரிட்டிஷ் பிரதமர் மார்கரெட் தாட்சர் தமது வீட்டுக்கு வெள்ளை அடிக்கும் வேலையையும் தாமே செய்கிருர்.

(ம-10)

# ஆபாசம் வேண்டும் என்று குரல் கொடுக்க ஆதாரமாக இருக்கும் கவர்ச்சிக் கன்னி!

ஹாலிவுட் சினிமா நடிகை களிலேயே வெறுக்கத்தக்க இனக் கவர்ச்சி நடிகையாக விளங்கியவள் மறைந்து விட்ட மர்லின் மன்ரோ தான்.

விளம்பரக் கலண்டர் நிறு வனம் ஒன்றுக்கு ஆடை மூடாத அழகு நிலாவாய்க் காட்சி தந்ததன் மூலம் இலட்சக் கணக் கான வாலிபர்களின் கவனத்தை மின்சார வேகத்தில் ஈர்த்த மன்ரோ படத் தயாரிப்பாளர் களின் பார்வையில் மின்னல் வேகத்தில் வீழ்ந்தாள்.

ஒரு பத்திரிகை ஆசிரியர் குறிப் பிட்டது போல கொஞ்ச நஞ்சம் மூடகமாய் இருந்த ஹாலிவுட் திரை உலகை வெட்ட வெளிச்சமாக்கிய பெருமை மன்ரோவுக்குத் தான் உண்டு.

பிறந்த மேனியோடு நீச்சல் குளத்தில் நீந்துவது, பத்திரி கைக் காரர்களுக்குப் போஸ் கொடுப்பது அவளுக்கு வெகு சாதாரணம்.

“பத்தில் ஒரு சதவீதமாவது நாகரீகத்தோடு நடந்து கொள்ள வேண்டும் நினைத்த போதெல்லாம் நிர்வாணக் கோலமெடுப்பது நாட்டில் மிருக வெறியை ஏற்படுத்தி விடும்” என்று தன்மையான இடங்களிலிருந்து வந்த கண்ட னக் கணைகளையெல்லாம் அவள் ஓரவிழிப் பார்வையாலேயே தகர்த்தெறிந்திருக்கிருள்.

“பிறந்தபோது கவுன் போட் டுக் கொண்டா பிறந்தோம்!” இதுதான் அவள் யாரைப் பார்த்தாலும் கேட்கும் முதல் கேள்வி.

ஹாலிவுட் படத்தயாரிப் பாளர்களுக்கு அவள் டாலர் வழங்கும் தருவாக இருந்தாள். எண்ணற்ற இளைஞர்களின் கனவுக் கன்னியாகவும் நினைவு நிலாவாகவும் விளங்கிய மன்ரோ அளவுக்கதிகமான தூக்க



மர்லின் மன்ரோ

மாத்திரையை சாப்பிட்டு ஹாலி வுட் ரசிகர்களை தூக்கத்தில் ஆழ்த்திவிட்டுப் போனுள்.

அவளைப்பற்றி இப்போது பேசப்புகுந்ததற்குக் காரணம் அவள் மீண்டும் உயிர்பெற்று எழுந்திருக்கிருள் அமெரிக்கா வின் ஒரு பகுதியில்.

ஆபாசப் புத்தகங்களை தடை செய்ய வேண்டுமா? வேண் டாமா என்பதுபற்றி அமெரிக்க இளைஞர்களிடையே ஒரு விவா தம் எழுந்துள்ளது. நீதிபதி ஒரு வரின் தலைமையில் அமைந்துள்ள கமிட்டி தடை செய்ய வேண்டும் எனத் தீர்ப்பளித்துள்ளதாம்.

அதை எதிர்த்து இளைஞர் களில் ஒரு பகுதியினர் போராட் டமே தொடங்கியுள்ளனராம். ஆபாசம் இருக்கலாம் என்பதற்கு அவர்கள் காட்டும் ஆதாரம் மர்லின் மன்ரோ எழுதிய சில வரிகள்.

மன்ரோ உயிரோடிருக்கும் போது ஒரு புத்தகத்துக்கு முன் னுரை எழுதினுளாம்: “ஆபாசம் என்பது எழுத்திலோ, படத்தி லோ இல்லை. அது பார்ப்போரின் கண்ணேட்டத்தில்தான் இருக் கிறது. ஒரு சிறு பகுதியினர் எதிர்ப்புக் குரல் எழுப்பக் கூடும். அதைப் பற்றி முன்னே றும் இளைஞர்கள் கவலைபடத் தேவையில்லை. “செக்ஸை” நான் “இயற்கை” என்று தான் கூறு வேன்.

“இயற்கையின் அந்தரங்கம் ஒளிவு மறைவின்றி நூலாக வரு வதில் தவறில்லை. யாரும் அதைப்படிக்கலாம் அல்லது படிக்காமலும் விடலாம். அது அவரவர்கள் விருப்பம். ஆனுல் புத்திசாலிகளின் மனதில் அப் புத்தகங்களோ, படங்களோ பாதக விளைவுகள் எதையும் ஏற் படுத்தாது என்பது என் கருத்து”

இதை வேதமாக எடுத்து வைத்துக் கொண்டு அமெரிக்க இளைஞர்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளனராம். வேறு வழியின்றி மன்ரோவின் கருத் தையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள நீதிபதிகள் சம்மதித் துள்ளனராம்! வேடிக்கைதான்! (ம-21)

# தேவனிடம் தேவைகளை கேட்டுப் பெறுவோம்!

## அவர் இரங்கித் தரும்போது யார் தடை செய்யக்கூடும்?

— பாஸ்டர் வி. ஈ. வி. ஜோசப் —

மனிதன் தனக்கு வேண்டியவைகளைப் பெற்றுக் கொள்ள பல வழிகளை கையாளுகிறான். சொந்த முயற்சியினாலே எத்தனையோ காரியங்களை மனிதன் பெற்றுக் கொள்கிறான்.

படிப்பு, பணம், அந்தஸ்து, செல்வாக்கு, திறமை, மனிதர்களில் தயவு போன்ற இன்னோரன்ன காரணங்களைக் கொண்டும் மனிதன் தனக்கு வேண்டியவைகளைப் பெற்றுக் கொள்கிறான்.

அது மட்டுமல்ல! மந்திர தந்திரங்கள், சதியாலோசனைகள், வஞ்சக மார்க்கங்கள், பலவந்த முறைகள் போன்றவைகளைக்கூட தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் மனிதர்களும் உள்ளனர்.

ஆனால் தேவனிடம் நெருங்கிச் சேர்வதாலும், தேவனை தன் உள்ளத்திலே ஏற்றுக் கொள்வதாலும், தேவனிடம் தனக்கு வேண்டியவைகளைக் கூறி அதைப் பெற்றுக் கொள்வோர் இன்று மிகச் சிலரே உளர்.

தேவன் ஆவியானவர் என வேதத்தில் நாம் வாசிக்கிறோம். (யோவான் 4/24) ஆவியான தேவனுக்கு உருவம் கிடையாது. அவர் எங்கும் வியாபித்திருந்தாலும், தம்மை வருந்தி அழைக்கும் மனிதனின் உள்ளத்தில் வந்து தங்க வாஞ்சிக்கிறார்.

அவரை அழைக்கும் ஒரு மனிதன் தன் இதயக் கதவை அவருக்கு திறந்து கொடுக்க வேண்டும். அதை தேவன் காண்கிறார்.

தன்னை அழைக்கும் பக்தர்களின் வாழ்வில் இதயத்தில் வந்து தங்குவார். ஒருவனது இதயம் தேவனின் ஆலயமாக மாறும்போது அந்த மனிதனும் தேவனும் எவ்வளவு நெருங்கிய ஒரு சம்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்கிறார்கள்!

அப்படிப்பட்ட மனிதன் தனக்கு வேண்டியதெல்லாவற்றையும் தேவனிடமே கேட்டுப் பெற்றுக் கொள்ளக் கூடியவனாக மாறுகிறான்.

இயேசு சொன்னார். "கேளுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும். தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள். தட்டுங்கள். அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்"

ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்கிறான். தேடுகிறவன் கண்டடைகிறான். தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். என்பதாக! (மத்தேயு 7/7,8)

இயேசு கூறிய வார்த்தைகளை நம்பி அவரிடம் நெருங்குவது விசுவாசமாகும். விசுவாசமென்கிற சொல்லில் பல இரகசியங்கள் பொதிந்துள்ளன. வேதம் கூறுவது என்னவெனில், "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. (எபிரேயர் 11/1)

உதாரணமாக நாம் ஒரு காரியத்தைக் குறித்து தேவனிடம் கேட்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அந்தக் காரியம் எமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை எமது இருதயத்தின் ஆழத்தில் உதிக்கிறது.

ஆனால் அந்த நம்பிக்கை உறுதியான நம்பிக்கையாக வேண்டும். எமது நம்பிக்கை அசைக்க முடியாதபடி உறுதியானகையில் அது விசுவாசமாகிறது. அது மட்டுமல்ல எமக்கு தேவையானதை நாம் காணக்கூடாமல் இருக்கலாம். ஆனால் காணப்படாத அந்த தேவை நிச்சயமாக கிடைக்கும் என்ற நிச்சயமும் ஏற்பட வேண்டும். அதுவே விசுவாசமாகும்.

அடுத்ததாக எபிரேயம் 11/6 இல், விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன், அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் என்று வாசிக்கிறோம்.

இன்று தேவனிடம் ஜெபிக்கிறவர்கள் ஏதோ கடமைக்காக ஜெபிக்கிறவர்களாக காணப்படுகிறார்கள். ஆனால் மேற்கண்ட வசனத்தில் வேதம் என்ன கூறுகிறது.!]

நாம் தேவனிடத்தில் சேர்ந்தால், அவர் உண்டென்று விசுவாசிக்க வேண்டும். அது மட்டுமல்ல நான் ஜெபிக்கும் ஜெபத்திற்கு பலன் கிடைக்கும் என்று விசுவாசிக்க வேண்டும். அப்படி இல்லா விட்டால் அந்த ஜெபங்களில் பலனில்லை. தேவனிடம் நெருங்கி சேர்வதாலும் பலனில்லை.

ஒரு மனிதன் தன் நண்பனொருவனிடம் சென்று தனது தேவையைக் குறித்து மன்றாடியதைப் பற்றி இயேசு கூறினார். (லூக்கா 11/5—8)

பாதி ராத்திரியிலே தன் நண்பனிடம் சென்று கதவை தட்டுகிறான். தனது வீட்டிற்கு ஒரு நண்பன் வந்திருப்பதாகவும் அவனுக்கு சாப்பிடக் கொடுப்பதற்கு தன்னிடம் ஒன்றுமே இல்லையெனவும் கூறி மூன்று அப்பங்களை கடனாகத் தர வேண்டுமென கேட்கிறான்.

வீட்டிற்குள் இருக்கிற மற்றவன் என்ன கூறினானென்றால்!' என்னைத் தொந்தரவு செய்யாதே. கதவு பூட்டியாயிற்று. என் பிள்ளைகள் என்னோடு கூடப் படுத்திருக்கிறார்கள். நான் எழுந்து உனக்கு தர முடியாது என்று கூறி விட்டான்.

ஆனால் வெளியில் இருக்கிறவனோ தொடர்ந்து தட்டுகிறான். வருந்தி கேட்கிறான்! கெஞ்சுகிறான். அப்பொழுது என்ன நடந்தது? அவன் தனக்கு சிநேகிதனாக இருக்கிறதன் நிமித்தம் எழுந்து கொடா விட்டாலும், அவன் தன்னிடத்தில் வருந்தி கேட்கிறதினித்தமாவது எழுந்திருந்து அவனுக்குத் தேவையானதை கொடுப்பான் என்று இயேசு கூறினார்.

இது தான் ஜெபம். கேளுங்கள் கொடுக்கப்படும் என்று இயேசு கூறியதை விசுவாசித்து, தொடர்ந்து கேட்க வேண்டியது எமது கடமை. லூக்கா 18/1 இல் இயேசு சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபிக்க வேண்டுமென கூறியுள்ளார்.

எமது தேவைகளை நாம் பல வகைகளில் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் சில தேவைகள் உலகத்தின் வழிகளில் நாம் பெற்றுக் கொள்ள முடியாது. பலத்தினால், பணத்தினால், செல்வாக்கினால், மற்றும் வழிகளால் எமது சில தேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியவே முடியாது.

அதற்கு ஜெபத்தில் மட்டுமே பதிலுண்டு. தேவனால் முடியாதது ஒன்றுமில்லை. தேவனிடம் நாம் நெருங்கிச் சேர்ந்து எமது தேவைகளைப் பெற்றுக் கொள்ள முயற்சிப்போமாக!

நாம் எமது தேவைகளை தேவனிடம் கூறி பெற்றுக் கொள்ள முயற்சிக்கும் பொழுது ஒரு மனிதனாலும், வேறு ஒரு சக்தியினாலும் அதைத் தடை செய்யவே முடியாது. ஏனெனில் நாம் எமது தேவையை மனிதர்களிடமல்ல, தேவனிடம் கேட்கிறோம். தேவன் எமக்கு இரங்கும்போது யார் எம்மை தடை செய்யக் கூடும்.

எனவே முதலாவது தேவன் உண்டென்றும் அவர் எமக்குப் பலனளிக்கிறவரென்றும் நாம் விசுவாசிப்போம். நம்பப்படுகிறவைகளில் உறுதியும் காணப்படாதவைகளில் நிச்சயத்தையும் ஏற்படுத்திக் கொள்வோம். தொடர்ந்து கேட்போம். வருந்திக் கேட்போம், கெஞ்சிக் கேட்போம்.

கர்த்தர் பரம சந்தோஷத்தினால் நிரப்பி எமது தேவைகளைக் கொடுப்பார். "இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை. கேளுங்கள் அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக் கொள்வீர்கள்" என இயேசு கூறியுள்ளார். (யோவான் 16/24)

எனவே நாமும் எமது தேவைகளை கேட்டு பெற்றுக் கொண்டு இயேசுவுக்குள் சந்தோஷமாயிருப்போமாக!' (ம)

# தொல்லை எனக்கு தொடர் கதையா?

— சோமலிங்கம் —

வட்டிப் பணத்தை நான் வாங்கி
வயிறு நிரப்பி அறியேன் என்
பட்டிப் பாலில் நீர் கலந்து
பணத்துக்காக விற்கவில்லை
ஒட்டி இருந்து ஒருவருக்கும்
ஊறு செய்து அறியேன் என்
மட்டில்லாத செருக் காலே
வறியோர் தம்மை ஒதுக்கவில்லை.

★

நெல்லும் பதரும் கலந்து விற்று
நெஞ்சுச் சான்றைக் கொல்லவில்லை
கல்லும் அரிசியும் கலந்து விற்க
கையில் எனக்கு வலு இல்லை
சொல்லும் செயலும் தொண்டுகளும்
சுய விளம்பரமே பெறுவதை நான்
அல்லும் பகலும் வெறுக்கின்றேன்
அற வழிதன்னில் நடக்கின்றேன்.

★

வன்னக்காக இருந்து பல
மனைகள் கட்டிப் பெருமை பெற
சின்னச் செயல்கள் சில செய்து
தேட்டம் தேக்கி வைக்க வில்லை
என்னை நம்பித் தந்தவற்றை
இல்லை என்று சொல்ல வில்லை
கன்னிப் பெண்கள் சூலகத்தில்
களங்கம் ஏற்றி மகிழவில்லை

★

அண்டை அயலார் தம்முடனே
அடிபிடி ஏதும் செய்யவில்லை
சண்டை சள்ளு ஒரு போதும்
சந்தி தெருவில் நடத்தவில்லை
அண்டி வாழும் அடிமைகளை
அடித்து ஒடுக்கி வாட்டவில்லை
தின்று வளர்ந்த இடத்திற்கு
தீங்கு ஏதும் செய்யவில்லை.

★

கற்றகல்விப் படி வாழ்ந்தேன்
கடமை செய்தேன் பலன் நோக்கேன்
பெற்றோர் உரையை என்றைக்கும்
பேணிக் காக்கத் தவறவில்லை
சற்றும் பிறரின் மனம் நோக
தமியேன் நாவோ ஆடவில்லை
இற்றைவரைக்கும் தீதறியேன்
இறைவன் நாமம் மறந்தறியேன்.

★

நண்பன் போலே நான் நடித்து
நயவஞ்சனைகள் செய்தறியேன்
துன்பம் வந்த போதிலுங் கை
தொட்டவள் தனையே பற்றி நின்றேன்
மன்றத் தலைமை பெற்றாலும்
மண்டைக்கிறுக்கு அடையாமல்
தொண்டு செய்து நான் வாழ்ந்தும்
தொல்லைகள் எனக்குத் தொடர் கதையா?

# கணித உலகில் அழியாத புகழ் பெற்ற தமிழர்

இந்த நூற்றாண்டில் வாழ்ந்த கணித மேதைகளில் கும்பகோணம் இராமாநுஜம் முக்கியமானவர். கணித உலகில் அழியாப் புகழ்பெற்ற ஒரு தமிழர் இவர்.

22-12-1887 இல் ஒரு ஏழைக்குடும்பத்தில் பிறந்தார். இளம் வயதிலேயே கணக்கில் ஆர்வம் காட்டிவந்

# ஆடுகளுக்குப் புகலிடம் தருவதற்கும் ஒரு இடம்!

# புகழ் பெற்ற தமிழர்

## இராமாநுஜத்தின் சில கேள்விகளுக்கு இன்னும் விடை கண்டுபிடிக்கப்படவில்லை

— அ. ச. அருணசலம் —

22-12-1887 இல் ஒரு ஏழைக்குடும்பத்தில் பிறந்தார். இளம் வயதிலேயே கணக்கில் ஆர்வம் காட்டிவந்தார். எப்பொழுதும் ஆழ்ந்த யோசனையில் இருப்பார். ஓடியாடி விளையாட மாட்டார். அதிகம் பேசவும் மாட்டார்.

அவருடைய கணக்குப் புதிர்களைக் கண்டு அவருடைய தந்தை, சுற்றத்தார், ஆசிரியர்கள் முதலிய எல்லோரும் திகைத்து அதிசயப்படுவதுண்டு.

கீழ் வகுப்பில் இருந்த காலத்தில், அவரது கணக்கு ஆசிரியர், "எந்த எண்ணையும் அதே எண்ணால் வகுக்க ஈவு ஒன்று" என்று சொல்லியவுடன் இராமாநுஜம் "பூஜ்ஜியத்தைப் பூஜ்ஜியத்தால் வகுத்தால் ஈவு என்ன சார்?" என்றாராம்.

இன்னும், பூமிக்கும் நட்சத்திரத்திற்கும் என்ன தூரம்? என்றும் கேட்டாராம். ஏழாவது வகுப்பில் படிக்கும்போதே பி. ஏ. வகுப்பிற்குள்ள கணித நூற்களைப் படித்து அவற்றிலுள்ள சிக்கலான கேள்விகளுக்கு எளிதாகப் பதிலளிப்பாராம்.

சிறு வயதாயிருந்தபோதே பிரசித்தி பெற்று யூலர் என்ற கணித அறிஞர் கண்டுபிடித்த தத்துவத்தின் உண்மையை இராமாநுஜம் தாமாகவே படித்து உணர்ந்தார்.

இவருடைய புத்தி சாதுரியத்தை மெச்சி இவருக்கு உபகாரச் சம்பளம் அளிக்கப்பட்டது.

இவர் கல்லூரியில் சேர்ந்து படித்த காலத்தில் கணிதத்தின் பேரிலே இருந்த பற்று அளவுக்குமீறி மற்ற பாடங்களைக் கவனியாமல் கணிதத்திலேயே கவனம் முழுதும் செலுத்தியதால் அவ்வாண்டு பரீட்சையில் தோல்வியடைந்தார். 1909 இல் இவருக்குத் திருமணமும் நடந்தது.

பல இடையூறுகளினால் தம் படிப்பை மேற்கொண்டு தொடர முடியாமல் போய் விட்டதென்றாலும் அவருக்கு கணித சாஸ்திரத்தில் இருந்த பேரவா சிறிதும் குறைவுபடவில்லை. கணித ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டு தாம் அறிந்து கொண்ட புதிய விஷயங்களை இரு பெரிய குறிப்புப் புத்தகங்களில் அவ்வப்போது எழுதி வைத்தார்.

பின்னர் ஒரு சமயம் இந்திய கணித சங்க ஸ்தாபகரான ஸ்ரீ இராமசாமி ஐயரைக்கண்டு உதவி கோருவதற்காகச் சென்றிருந்தார். அப்போது இவருடைய குறிப்புப் புத்தகத்தை அவரிடம் காட்டினார். அதைப் பார்த்த ஐயர் இவருக்கு கணிதத்தில் உள்ள அசாதாரணமான அறிவை அறிந்து இவருக்கு உத்தியோகம் தேடித் தரும்படி ஆசிரியர் சேஷ ஐயருக்குக் கடிதம் தந்து உதவினார். அதனால் உத்தியோகம் கிடைத்தது. ஆனால் சில காலத்தில் அதனை இழந்துபோய் பலவித அல்லல்களுக்கு ஆளாக நேர்ந்தது.

இப்படியிருக்க, 1913 இல் லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஹார்டி என்பவருடன் அவருக்குக் கடிதப் போக்குவரத்து ஏற்பட்டது. அவர் இவருடைய கடிதத்தின் மூலமாகவே இவருடைய திறமைகளைக் கண்டு, விஞ்ஞான முறைப்படி கணிதம் பயின்றால் இவர் முன்னுக்கு வர வசதியாயிருக்கும் என்ற கருத்துடன் இவரை இங்கிலாந்துக்கு அழைத்தார்.

ஆனால் தாயார் விரும்பாத படியால் போக மறுத்துவிட்டார். பிறகு எதிர்பாராதவிதமாக தாயாரின் அநுமதி கிடைத்தது. குலதெய்வமாகிய நாமகிரி தேவி கனவில் தோன்றி மகனை அனுப்பி வைக்கும்படி தெரிவித்ததால் போக அநுமதி தந்தார்.

இதே சமயம் ஹார்டியின் நண்பரொருவர் நேராக வந்து தூண்டியதின் பேரில் இங்கிலாந்து போகவிரும்பிச் சென்றார். அங்கு ஹார்டி இராமாநுஜத்திற்குப் பாடம் கற்பித்து வந்தார். சில சமயம் குருவை மிஞ்சிய சிடராகி விடுவார். இராமாய-ஜயம்!

தம் சிடரிடத்திலேயே பல அரிய விஷயங்களைக் கற்றுப் பயன்பெற்றதாக ஹார்டி எழுதியுள்ளதிலிருந்து இதை அறியலாம்.

இராமாநுஜத்தின் கணித ஆராய்ச்சிகளை நூல்வடிவமாக ஹார்டி வெளியிட்டிருக்கிறார். இராமாநுஜத்தின் நிபுணத்துவத்தைப் பற்றி லிட்டில்வூட் என்ற அறிஞர் கூறும்போது, ஒவ்வொரு எண்ணும் இராமாநுஜத்தின் அந்தரங்கத் தோழன் என்கிறார்.

இங்கிலாந்தில் ஒரு சமயம் இவர் நோயாயிருந்தார். அவரைப் பார்த்துவர பேராசிரியர் ஹார்டி 1729 ஆம் எண்களையுடைய வாடகை மோட்டாரில் சென்றிருந்தாராம். 1729 என்பதன் காரண எண்கள் (7X13X19) அதிர்ஷ்ட எண்களாயில்லையே என்று ஹார்டி கூறினாராம்.

உடனே இராமாநுஜம், அப்படியல்ல, அது ஒரு விசேஷ எண்ணாகும் என்று கூறி அதனை விளக்கினாராம். இருவிதங்களில், இரண்டு எண்களையுடைய கனங்களின் ஒரே கூட்டுத்தொகையைக் கொடுக்கக் கூடிய சிறிய எண் இதுவே என்றாராம்.

எண் சம்பந்தமான ஆராய்ச்சியில் இராமாநுஜத்திற்கு மிஞ்சியவர் ஒருவரும் அப்போது இருக்கவில்லை. இவரது சில கேள்விகளுக்கு இன்னும் விடை கண்டுபிடிக்க முடியாமல் கணித வல்லுநர்கள் திணறிக் கொண்டிருக்கிறார்களாம்.

அவர்கள் இங்கிலாந்தில் இருந்தபோதிலும் தம் ஆசாரத்தை விடாமல் தம் தாயார் சொல்லியபடி தவறாது நடத்தி வந்தார். மாமிச உணவை உண்ணவில்லை. மரக்கறி வகைகளை மட்டுமே உண்டுவந்தார். தாமாகவே சமைத்து உண்டதோடு, சமைக்கும்போது ஆங்கில உடையைக் களைந்துவிட்டு இந்திய உடையை அணிந்து தான் சமைப்பார்.

1917 இல் அவர் கடும் நோய்க்குள்ளானார். அச்சமயம் கூட அவர் மாமிச உணவை உண்ண விரும்பவில்லை.

1918 இல் அவர் ராயல் சொஸைட்டியின் அங்கத்தவராக்கப்பட்டார். இந்த கௌரவம் எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதல்ல. முதல் முதலாக இந்த கௌரவம் பெற்ற இந்தியர் இராமாநுஜமே. அப்போது வயது 30.

பின் 1919 இல் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். அங்கு வந்தபோது உடல் நிலை மிகவும் மோசமாகியிருந்தது. அதனால் கடைசியாக அவர் 26-4-1920 இல் தம் தாயாரையும் மனைவியையும் விட்டுப் பிரிந்து உயிர் நீத்தார். ஆயினும் அவரது புகழ் இன்னும் இருந்துவருகிறது. (ம)

## இளமையான மணமகன்

பீட்டர் செல்லர்ஸ் என்ற சிரிப்பு நடிகரின் முன்னாள் மனைவி ஒரு சினிமா நடிகை. பெயர் பிரிட் இக்லேண்ட்.

23 வயது பாப் பாடகர். "சிலிம்ஜிம் மெக்டோனல்" என்பவரை 38 வயதான இவர் விரைவில் மணக்கவிருக்கிறார்.

தன்னை விட வயதில் குறைந்த வாலிபரை இவர் மணப்பது குறித்து கேலி பேசியவர்களை சமீபத்தில் லண்டனுக்கு வந்த இடத்தில் ஆவேசமாக சாடினார்.

"என்னுடைய புகழையும், தொழிலையும் மணக்கவிருக்கும் இளமையான மணமகனையும் பார்த்து பொறாமைப்படுகிறார்கள். அவர்களை நான் சற்றும் மதிக்கவில்லை" எனக் கூறி விமானம் ஏறி விட்டாராம் இந்த அரைக் கிழவி.

(ம-10)

## ஆடுகளுக்குப் புகலிடம் தருவதற்கும் ஒரு இடம்!



மிருகக்காட்சிச் சாலையில் ஆடுகள் வளர்க்கப்படுவது பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? பெர்லின் மிருகக்காட்சிச் சாலையில் இந்த அதிசயம் நடக்கிறது, வீட்டுப் பிராணியான ஆடு ஈனும் குட்டிகள் பலவீனத்துடன் இருந்தால் இந்த மிருகக்காட்சிச் சாலைக்கு அனுப்பப் படுகின்றன. அங்கு அவற்றிற்கு நல்ல பராமரிப்புக் கிடைக்கிறது. (ம-சி)

## மக்களைக் கவர்ந்திழுக்கும் விவேகானந்தர் மண்டபம்

கௌதம புத்தர் போதி மரத்தடியில் ஞானோதயம் பெற்றார். அது போல சுவாமி விவேகானந்தர் 1892 ஆம் ஆண்டு டிசம்பர் 25ஆம் நாள் மாலையில் முக்கடல்களின் நடுவே கொந்தளிக்கும் அலைகளில் குதித்து நீந்திச் சென்று, கரையிலிருந்து 1600 அடி தொலைவில் உள்ள ஸ்ரீபாத பாறையை அடைந்தார். டிசம்பர் 27ஆம் நாள் வரை தியானித்ததில் ஆழ்ந்து ஞானோதயம் பெற்றார்.

வடக்கே தெரிந்த இந்திய நாட்டை நோக்க அதன் ஆன்மீக வளத்தை நினைந்து நினைந்து அதனை மேல் நாடுகளுக்கு எடுத்துக் கூற திட்டமிட்டார்.

"இந்தியாவின் கடைசி துண்டுப் பாறையில் இருந்தபோது என் உள்ளத்தில் ஒரு திட்டம் தோன்றியது எனக் கூறினார் சுவாமி விவேகானந்தர். பின்னர் மேலை நாடுகளில் சென்று இந்தியாவின் ஆன்மீக வளத்தை எடுத்துக்கூறும் பிரச்சாரப் பணியில் தன்னை இணைத்துக் கொண்டார்.

சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகளை உலகத்திற்கு எடுத்துக் கூறவும், அவர் ஞானோதயம் பெற்ற பாறையில் ஒரு சிறந்த நினைவுச் சின்னம் எழுப்பவும்; 1962ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விவேகானந்தர் பாறை நினைவுக்குழு அமைக்கப்பட்டு, 1970ஆம் ஆண்டு நினைவுச் சின்னம் திறக்கப்பட்டது.

இக்கருங்கல் நினைவு மண்டபத்தின் நீளம் 85 அடி. அகலம் 40 அடி. இதன் முகப்பு அஜந்தா குகையையும், விமானம் பேலூர் இராமகிருஷ்ணர் கோயிலையும் நினைவூட்டும் வகையில் அமைந்துள்ளன.

65 அடி உயரம் கொண்ட விமானத்தின் அடியில் சுவாமி விவேகானந்தரின் 8 அடி வெங்கலச் சிலை ஒன்று, நின்ற கோலத்திலே நிறுவப்பட்டுள்ளது.

தேவி பாதத்திற்கென ஒரு தனிக்கோயிலும், சபாமண்டபத்தின் தாழ்வாரத்தில் ஒரு தியான மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்துச் சிற்பக் கலைஞர்களின் அருந்திறனுக்குச் சான்று பகரும் வகையில் இந் நினைவு மண்டபம் நிலவுகிறது. இக்கலைக்கோவிலிலே இருந்து சுற்றிலும், உள்ள கடலிடைக் கொஞ்சும் சலங்கை என ஒலிக்கும் அலை ஓசை, காண்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

தமிழக அரசின் சார்பாக மூன்று லட்ச ரூபாயில் கட்டி முடிக்கப்பட்ட படகுத்துறையிலிருந்து காலை 7 மணி முதல் 11 மணிவரையிலும் மாலை 2 மணி முதல் 5 மணி வரையிலும் படகுப் போக்குவரத்து நடை பெற்று வருகிறது.

நாள்தோறும் எண்ணற்ற பயணிகள் இப்படகுப் போக்குவரத்தின் மூலம் நினைவுச் சின்னத்தைக் கண்டு களிக்கின்றனர்.

வங்கத்திலே தோன்றிய ஆன்மீகச் சிங்கமாகிய விவேகானந்தருக்கு வங்காள விரிகுடாப் பகுதியிலேயே நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டுள்ளது ஒரு தனிச் சிறப்பாகும். (ம-சி)

# ஒலி ஒளி உருவம்

ரூபவாஹினி
RUPAVAHINI

## கலையரங்கத்தில் நாதஸ்வரம்

கடந்த திங்கட்கிழமை (28-5-84) இரவு ரூபவாஹினி கலையரங்கம் நிகழ்ச்சியில் பி. வெள்ளைச்சாமி குழுவினரின் நாதஸ்வர இசை ஓசை எழுப்பியது.

பாட வேண்டும் ஐயா, உருகாதா முருகா, திருப்புகழ் ஆகிய பாடல்களை வெள்ளைச்சாமி நாதஸ்வரத்தில் நாதமெழுப்பிய விதம் கேட்பதற்கு இதமாகவே இருந்தது.

இளம் கலைஞர்களைப் பக்க வாத்தியத் துணையாகக் கொண்டு இசையில் இணை சேர்த்தது பாராட்டத்தக்கதொரு முயற்சியாகும்.

## பின்னணிக் குரலில் நடிகர்—நடிகை

கடந்த புதன்கிழமை (30-5-84) மாலை 6.30 மணிக்கு ரூபவாஹினியில் உள்ளூர் தமிழ்த் திரைப்படம் "நாடு போற்ற வாழ்க"வின் இரண்டாவது பகுதி ஒளிபரப்பானது.

இரண்டாவது தொடரில் பிரபல சிங்களத் திரைப்பட நடிகை கீதா குமாரசிங்க, கே. எஸ். பாலச்சந்திரன் ஆகியோரையும் காணக்கூடியதாக இருந்தது. பாலச்சந்திரன் கவர்ச்சி

கேட்பதற்கு அருமையாகவே இருந்தது.

எஸ். ராமதாஸ் மட்டும் இப்படத்தில் இல்லை என்றால் படம் படுபோராகத் தான் இருந்திருக்கும். ராமதாஸ் தோன்றும் ஒவ்வொரு கட்டமுமே கலகலப்பானதாகும். அவரது முஸ்லிம் தமிழைக் கேட்டு சிரிக்காதோர் இருக்கவே முடியாது.

## ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சி

ரூபவாஹினியில் இவ்வாரம் ஒளிபரப்பாகவுள்ள தமிழ் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:—

* ஜூன் 3 ஞாயிறு: மாலை 5.55 சைவநீதி.

* ஜூன் 4 திங்கள்: மாலை 6.30 ஊரும் உலகும் (தமிழில் உரையுடன்), மாலை 7.15 கலையரங்கம் குச்சுபுடி நடனம் ரங்கா விவேகானந்தன்.


* ஜூன் 6 புதன்: மாலை 5.30 இது உங்கள் நாடு, மாலை 6.30 உள்ளூர்த் திரைப்படத் தொடர் "நாடு போற்ற வாழ்க" (பாகம் 3)

* ஜூன் 7 வியாழன்: மாலை 7.15 வாத்தியவிருந்து வயலின் ரி. வி. பிச்சையப்பா.

* ஜூன் 8 வெள்ளி: மாலை 6.00 விளையாட்டுப் பயிற்சி (தமிழில் உரையுடன்)



"லாஹிரு தஹஸக்" சிங்கள டெலி டிராமாவில் சுவையான ஒரு கட்டம்.



"வளர்பிறை" முஸ்லிம் நிகழ்ச்சியில் முதுபெரும் பாடகர் ஜனுப் எம். ஏ. ஹஸன் அலியார் பக்க வாத்தியக் கலைஞர்கள் சகிதம் பாடுகிறார்.

ஒளிபரப்பாகவிருக்கிறது.

இத் தொடர் நாடகம் ஏற்கனவே ஒருமுறை வாஹினி ரசிகர்களின் வரவேற்பைப் பெற்று இதயத்தைத் தொட்ட நல்லதொரு படைப்பாகும்.

பார்க்கத் தவறியவர்கள் கட்டாயம் பார்க்க வேண்டிய அருமையான சிங்கள டெலி டிராமா லாஹிரு தஹஸக்.

கதாநாயகனின் தாயாராக நடிக்கும் பிரபல சிங்களத் திரைப்பட நடிகை தெவலொக்க ஹாமினேயின் நடிப்பு வெகு இயற்கையானதாகும்.

மறு ஒளிபரப்பானாலும் மனதைத் தொடும் இந்த சிங்கள டெலி டிராமா தமிழ் ரசிகர்களையும் பெரிதும் கவரும் என்பதில் சந்தேகமேயில்லை.

## வளர்பிறையில் ஹஸன் அலியார் பேட்டி, பாடல்

இலங்கை வானொலி இஸ்லாமிய இசைத்துறையில் ஐம்பதாண்டு காலத்தைப் பூர்த்தி செய்துள்ள முதுபெரும் இசைக் கலைஞர் ஜனுப் எம். ஏ. ஹஸன் அலியாரின் பேட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை (27-5-84) மாலை ரூபவாஹினி "வளர்பிறை" நிகழ்ச்சியில் இடம்பெற்றது.

பிரபல இஸ்லாமியப் பாடகரான ஜனுப் ஹஸன் அலி

5-7-1981 ஆம் திகதிய "சிந்தாமணி" இதழில் பிரசுரமான கவிதையாகும்.

அக்கவிதையை அப்படியே பாடியிருந்தாலாவது மகிழ்ச்சி அடைந்திருப்பேன். கவிதையின் சில அடிகளைத் தவிர்த்தும், சொற்களைச் சிதைத்தும் பாடியது வேதனைக்குரியதாகும்.



"ஹிந்தி கீ" நிகழ்ச்சியில் நிர்மல் உதாஸ், உஷா ஜரிவாலா பாடும் காட்சி.

"கவிஞன் ஒரு பொதுச் சொத்து. கவிதை அவன் தனிச் சொத்து." என்பதே என் கோட்பாடாகும். ஒருவரின் சொத்தைப் பிறர் அனுபவிக்கலாம். ஆனால் அபகரிக்கக் கூடாது. —இப்படி ஸ்ரீ தேவகாந்தன் எழுதியுள்ளார்.



இளம் பக்க வாத்தியக் கலைஞர்கள் சகிதம் பி. வெள்ளைச்சாமி நாதஸ்வர இசை வழங்குகிறார்.

கவனம்" என இருக்க வேண்டியவர்களே இப்படி ஒரு புகார் வரும் விதத்தில் நடந்து கொள்ளலாமா?

ஜனுப் எம். ஏ. ஹஸன் அலியார் பாடிய பாடலின் சொந்தக்காரர் தாமே என்று ஸ்ரீ தேவகாந்தன் உரிமை கொண்டாடுவதற்கு பக்கபலமாக இருக்கும் 5-7-1981 ஆம் திகதி சிந்தாமணியில் பிரசுரமான "கவனம்" என்ற அவருடைய கவிதையை இப்பக்கத்தில் மறுபிரசுரம் செய்திருக்கிறோம்.

வரவேற்பைப் பெற்றதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சாதாரண மனிதனொருவன் உணர்ச்சி மயமான சமயங்களில் அசாதாரண தீரச் செயல்களைப் புரியும் மனித மிருகமாகவே மாறிடும் ஒரு கற்பனைக் கதையே "இன்கிறெடிபிள் ஹள்க்".

பில் பிக்ஸி நடித்துள்ள இப்படம் வியக்கத்தக்க சம்பவங்களைக் கொண்ட தொடராகும்.

சாதாரண மனிதனவன் மனித மிருகமாக மாறும் பொழுது ஏழு அடி உயரமுள்ள பலவானாகவே திடீரென உருவமாற்றம் பெறுகிறான். அப்பொழுது சாதாரண மனிதனவன் அணிந்திருந்த உடைகள் எல்லாம் கிழிந்து விடுகிறது.

மீண்டும் பழையபடி சாதாரண மனிதனாகும் பொழுது ஏற்கனவே அவன் உடுத்தியிருந்த ஆடைகளுடன் காட்சியளிக்கிறான். இப்படி நம்ப முடியாத காட்சிகளும் பலவுண்டு!

**தயாரிப்பு: சஞ்ஜயன்**

## மீண்டும் மனித மிருகம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை (27-5-84) முதல், நீண்ட இடைவேளைக்குப் பிறகு ஐ. டி. என். ஒளிபரப்பில் மீண்டும் "இன்கிறெடிபிள் ஹள்க்" ஆங்கிலத் தொடர் ஆரம்பமாகியுள்ளது.

இனிமேல் ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு எட்டு மணி என்றதும் ஐ. டி. என். ரசிகர்கள் "இன்கிறெடிபிள் ஹள்க்" நிகழ்ச்சியைப் பார்க்கத் தயாராகி விடுவார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

ரசிகர்களைக் கவரும் வகையிலான இத்தொடர் ...

## ரஸாதரி நடித்த ஏத்தின் ஏத்துட்ட

கடந்த புதன்கிழமை இரவு ரூபவாஹினியில் "மிட் வீக் மூவி"யாக "ஏத்தின் ஏத்துட்ட" என்னும் சிங்களத் திரைப்படம் ஒளிபரப்பானது.

இப்படத்தில் பிரபல சிங்களத் திரைப்பட நடிகை மாலினி பொன்சேகாவின் தங்கை ரஸாதரி பொன்சேகா முக்கிய கதாபாத்திரமேற்று நடித்திருந்தார்.

மற்றும் கருணாரத்ன கஹாவிட்ட, விமல் குமார டி கொஸ்தா, அனுஷா மடிவக்க ஆகியோரும் நடித்திருந்தனர்.

ஆடல், பாடல், சண்டை, கற்கழிப்பு என்று சில சிங்களப் படங்களுக்கே உரித்தான பாணியில் இளைய தலைமுறையினரைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்த இப்படம், ஒரு சாராருக்குப் பிடித்தமானதாயிருந்தாலும் இன்னொரு சாராருக்கு முகச் ...


## இன்றைய திரைகளில்

**11-வதுவாரம்**

ஒருதலை காதலின் விளைவுகளை சித்தரிக்கும் கண்ணீர் காவியம்

லிடோ
(யாழ். நகர்)
10-30, 2-30, 6-30

மீபுர
(நீர்கொழும்பு)
6-00, 9-30

நியூ இம்பீரியல்
(மூதூர்)
6-00, 9-30

குமரன்
(மன்னார்)
6-00, 9-30

சேகர், ரூபா, ரவிந்தர் உஷா நடித்த

**ஒருதலை ராகம்** (கலர்)

கதை, வசனம், டைரக்ஷன்: இசை: ராஜேந்தர்

**3—வதுவாரம்!**

சமந்தா
10.00, 2.00, 6.00, 9.30

கொன்கோட்
(தெஹிவளை)
10.30, 2.00, 6.00, 9.30

வின்ஸர்

பிரபல சிங்களத் திரைப்பட நடிகை கீதா குமாரசிங்க, கே. எஸ். பாலச்சந்திரன் ஆகியோரையும் காணக்கூடியதாக இருந்தது. பாலச்சந்திரன் கவர்ச்சி வில்லனாக வந்து தமது பங்கை கச்சிதமாகச் செய்திருக்கிறார்.

கதாநாயகனாக நடிக்கும் வி. பி. கணேசனுக்கு எஸ். செல்வசேகரன் பின்னணிக் குரல் கொடுத்திருந்தார். மற்றும் சுவர்ண மல்லவராச்சி, கீதா குமாரசிங்க ஆகிய சிங்கள நடிகைகளுக்கு முறையே நெய்ரஹீம் ஸஹீத், ஆமினா பேகம் ஆகியோர் பின்னணிக் குரல் கொடுத்துப் பேசியிருந்தது

7.15 வாத்தியவிருந்து வயலின் ரி. வி. பிச்சையப்பா.

* ஜூன் 8 வெள்ளி: மாலை 6.00 விளையாட்டுப் பயிற்சி (தமிழில் உரையுடன்).

## லாஹிரு தஹஸக் மீண்டும் காட்சி

கடந்த 26–5–84 சனிக்கிழமை இரவு 8.35க்கு ரூபவாஹினியில் "லாஹிரு தஹஸக்" என்னும் சிங்கள டெலி டிராமா ஆரம்பமானது.

இந்த டெலி டிராமா தொடர்ந்து பதினொரு வாரங்கள் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும்

மாலை ரூபவாஹினி "வளர்பிறை" நிகழ்ச்சியில் இடம்பெற்றது.

பிரபல இஸ்லாமியப் பாடகரான ஜனாப் ஹஸன் அலியாரை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் அல்ஹாஜ் வீ. ஏ. கபூர் பேட்டி கண்டார்.

முதன் முதல் பக்கவாத்தியங்களுடன் இலங்கை வானொலியில் இஸ்லாமிய கீதம் பாடியவர் மட்டுமல்லாது, இந்தியப் பாடகர்களையும் இலங்கை வானொலியில் அறிமுகப்படுத்தியவர் ஜனாப் ஹஸன் அலியார் என்ற தகவல்களையும் பேட்டி மூலம் அறிய முடிந்தது.

பேட்டியுடன் "எங்கினும் கவனம் எதிலுமே கவனம் இருந்திடில் மானிடனே..." என்ற அருமையான கருத்துள்ள பாடல் ஒன்றையும் பாடி "வளர்பிறை" ரசிகர்களை மகிழ்ச்சியிலாழ்த்தினார் ஹஸன் அலியார்.

பாடாகும், ஒருவரின் சொத்தைப் பிறர் அனுபவிக்கலாம். ஆனால் அபகரிக்கக் கூடாது. — இப்படி ஸ்ரீ தேவகாந்தன் எழுதியுள்ளார்.

"எங்கும் கவனம் எதிலும்

நிகழ்ச்சியைப் பார்க்கத் தயாராகி விடுவார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

ரசிகர்களைக் கவரும் வகையிலான இத்தொடர் முன்பு ஒளிபரப்பான பொழுது நல்ல

கொண்டு தயாரிக்கப்பட்டிருந்த இப்படம், ஒரு சாராருக்குப் பிடித்தமானதாயிருந்தாலும் இன்னொரு சாராருக்கு முகச் சுளிப்பையே எற்படுத்திய காட்சிகளும் இல்லாமலில்லை.


10.30, 2.00, 6.00, 9.30

வின்ஸர்
(யாழ். நகர்)
10.30, 2.30, 6.00, 9.30

சாந்தி
(மட்டுநகர்)
2.00, 6.00, 9.30,

மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
நடித்த
ஒளி விளக்கு
(கலர்)
(புத்தம் புதிய கொப்பி)




"நாடு போற்ற வாழ்க" ஈழத்துத் தமிழ் திரைப்படத்தில் கே. எஸ். பாலச்சந்திரனும் சுவர்ண மல்லவராச்சியும் தோன்றிக் காதல் புரியும் கட்டம்.



"ஏத்தின் ஏத்தட்ட" சிங்களத் திரைப்படத்தில் மாலினி பொன்சேகாவின் தங்கை ரனாதரி பொன்சேகாவும் விமல் குமார டி கொஸ்தாவும் தோன்றும் உணர்ச்சிகரமான ஒரு கட்டம்.

# கவனம்!

### — ஸ்ரீ தேவகாந்தன் —

எங்கும் கவனம் எதிலும் கவனம்
எப்பவும் தேவை மானிடனே — துயர்
தங்கும் மனதிலும் கொஞ்சம் கவனம்
சரிவை நிமிர்த்து விடும்
பொங்கும் இன்பம் பொன்பொருள் யாவும்
புகழைச் சேர்த்து வரும் — அவை
மங்கும் கவனம் வாழ்வில் இல்லையேல்
வந்தது போல் மறையும்.

★

சொல்லிலும் செயலிலும் கவனம் இருந்தால்
தொல்லைகள் அகன்று விடும் — பெரும்
வல்லவன் ஆயினும் கவனம் இல்லையேல்
வாழ்வே சரிந்து விடும்
கல்லாத பேர்களும் கவனத்தை வாழ்வினில்
கொள்வதால் புகழ் பெறுவர் — புகழ்
நில்லாது போய்விடும் வந்தது போலவே
நிலைத்திட கவனம் கொள்வீர்

★

இருப்பவன் பொருளைக் கொடுப்பதில் கவனம்
இருப்பது நன்மை தரும் — பொருள்
பெறுபவன் அதனைக் காப்பதில் கவனம்
பொருத்திட துயர் குறையும்
வருவாய்க் கேற்ற செலவுகள் செய்திட
வாழ்க்கை இனித் திருக்கும் — அதற்கு
கருவாய்க் கொள்வோம் கவனந் தன்னை
கணமும் மகிழ் விருக்கும்.

## ஹஸன் அலியார் பாடிய பாடல்: 'கவனம்' கவிதை

"வளர்பிறை" நிகழ்ச்சியில் இடம்பெற்ற ஜனாப் எம். ஏ. ஹஸன் அலியார் பாடிய "எங்கினும் கவனம் எதிலுமே கவனம் இருந்திடில் மானிடனே..." என்ற பாடல் தொடர்பான பிரச்சினை ஒன்றை பண்டாரவளை டயரபா தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த ஸ்ரீதேவகாந்தன் எழுப்பியுள்ளார்.

இப்பாடல் தொடர்பாக ஸ்ரீதேவகாந்தன் எமக்கு எழுதியுள்ள கடிதத்தில் —

"வளர்பிறை" நிகழ்ச்சியில் பழம்பெரும் இஸ்லாமியப் பாடகராம் ஹஸனலியார் பாடிய "எங்கினும் கவனம் எதிலுமே கவனம் இருந்திடில் மானிடனே..." என்னும் பாடல், "கவனம்" என்னும் தலைப்பில் என்னால் எழுதப்பட்டு,

## அழுக்கு நாணயங்களை சுத்தப்படுத்தும் சேவை!

"சுத்தம் சுகம் தரும்" என்று நாம் அறிவோம். இந்த சுத்தத்தை கடைபிடிக்க மேலைநாடுகள் அரும்பாடு படுகின்றன.

இங்கிலாந்தில் உள்ள சென்ட் பிரான்ஸிஸ் என்ற ஹோட்டலில் நம்மிடம் உள்ள அழுக்கான சில்லறைகளை கொடுத்தால் சுத்தமாக பளபளவென மாற்றித் தருகிறார்கள்.

ஆர்னல்ட் என்பவர் இதற்காக விசேஷமான இயந்திரம் ஒன்றை கண்டு பிடித்துள்ளார். சில நிமிடங்கள் இதில் சில்லறைகள் போடப்பட்டு அதிவேகமாக சோப்பு நீருடன் சுழற்றப்படுகிறது.

பின் கொதிக்கும் நீரில் போடப்பட்டு சூடான ஆவியில் உலர்த்தப்படுகிறது.

சரி இது எவ்வாறு ஆரம்பித்தது தெரியுமா? அந்த ஹோட்டலில் அழுக்கு சில்லறைகள், அங்கு வரும் பணக்கார சீமாட்டிகளின் கையுறைகளை அழுக்கு படுத்தியதால் இதை ஆரம்பித்தனராம். இன்றும் அப்பணி தொடருகின்றது! (ம–10)

## டிஸ்கோ வியாதி பரவுகிறது

ஆந்திராவில் புதிதாக ஒரு வியாதி பரவுகிறது. இதற்குப் பெயர் "டிஸ்கோ வியாதி". ஆனால் "டிஸ்கோ" நடனத்திற்கும் இதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

முதலில், உள்ளங்காலில் எரிச்சல் தோன்றும். பிறகு மெல்ல மெல்ல இடுப்புவரை பரவும். தேள் கொட்டியது போல் கால்களில் கடுக்கும். வலி தாங்காமல் உடலை நெளித்து வளைத்துத் துன்பப்படுவார்கள். அதனால் தான் இந்தப் பெயர்! (ம–10)

ரூபவாஹினி கலையரங்கத்தில் ஈழத்து இசையமைப்பாளர்களான கண்ணன் – நேசம், மோகன் – ரங்கன், ரொக்சாமி ஆகியோரின் இசை நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்ப வேண்டுகிறோம். — பரமேஸ், ஞானசேகரம், கலைஞானம், மணியம், ராகலை மேல்பிரிவு.

★

வாஹினியில் ஒளிபரப்பான "பாய் பாய்" ஹிந்திப் படத்தின் மூலம் "ரத்த பாசம்" தமிழ்த் திரைப் படத்தையும் பார்த்த திருப்தி ஏற்பட்டது. — ஏ. எ. அமீர் அலி, சின்னக் கிண்ணியா – 3.

★

கதிரவனைக் கண்டு மலரும் கமலம் போல், வாரம் ஒரு முறை "சிந்தாமணி" கண்டு மலரும் ஒலி ஒளி உருவை நுகரும் வண்டுகள் நாம். — ஸகரியா, ஹம்மாத், மஸாகிரா, முர்ஸிதா, நஜிமுன்நிஸா, ஐஸா நோனா, தெல்தோட்டை.

★

நல்ல நகைச்சுவையுடன் கூடிய "நாடு போற்ற வாழ்க" திரைப்படத் தொடரை மாலை 6 – 30 மணிக்கு ஒளிபரப்புவதைத் தவிர்த்து, இரவு 7 – 15 க்கு மாற்ற [illegible]. — சர்மிளா பேகம், அனுராதபுரம்.

★

வி. பி- கணேசனை, எம். ஜி- ஆர்- பாணிக் கதை காப்பாற்றியதால் ஏதோ நம் நாட்டுப் படம் என்ற ரீதியில் "நாடு போற்ற வாழ்க"வை ராமதாஸுக்காகப் பார்

# வாசகர் எதிரொலி - எதிரொளி

த்து ரசிக்கலாம். — பிரேம் ஹாஷிம், பதுளை.

★

ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் 25 நிமிட நேரங்களாகப் பகுதி பகுதியாக நம் உள்ளூர்த் திரைப்படங்களைக் காட்டுவதால் தான் அப்படங்களை பார்த்து ரசித்து மகிழ்ச்சியடைய முடிகிறது. எம். ஏ. எம். மிஸ்பாஹுல் ஹுதா, சம்மாந்துறை — 2.

★

உலகின் தலை சிறந்த உதைபந்தாட்ட வீரர் பேலேயின் உதைபந்தாட்ட நிகழ்ச்சியை ரூபவாஹினியில் ஒளிபரப்ப வேண்டுகிறேன். — எம். எல். சுபைர், காத்தான்குடி – 4.

★

கடந்த வாரம் இப்பகுதியில் இடம் பெற்றிருந்த "நாடு போற்ற வாழ்க" திரைப்பட விமர்சனத்தில், மரைக்காயர் ராமதாஸுக்குச் சபாஷ் பல போட்டிருந்தீர்கள். எஸ். வி. ராமதாஸ் என்று குறிப்பிட்டிருந்தது தவறு. எஸ். ராமதாஸ். என்பதே சரியானதாகும். எஸ். வி. ராமதாஸ், தமிழ்த் திரைப்பட வில்லன் நடிகராவார். — எஸ். மகேந்திரன், கொழும்பு — 14.

★

கே. பாலச்சந்தரின் கதை, வசனம், டைரக்ஷனில் உரு

வான பல திரைப்படங்களை வாஹினியில் பார்த்து விட்டோம். இச் சந்தர்ப்பத்திலாவது, பாலச்சந்தரை கதை, வசன கர்த்தாவாக தமிழ்ப்பட உலகிற்கு அறிமுகப்படுத்திய எம். ஜி- ஆர். நடித்த "தெய்வத்தாய்" திரைப்படத்தை ஒளிபரப்ப வேண்டுகிறோம். — எஸ். ரி. எம். பி., கல்முனைக்குடி — 3-

★

இலங்கை வாழ் தமிழ், முஸ்லிம், சிங்களச் சினிமா ரசிகர்களின் எம். ஜி. ஆர். படம் பார்க்க வேண்டுமென்ற ஆவலைப் போக்க குடியிருந்த கோயில், நாளை நமதே, அடிமைப் பெண், மாட்டுக்கார வேலன், திருடாதே, ரிக்ஷாக்காரன், மதுரை வீரன் போன்ற படங்களை ஒளிபரப்ப வேண்டுகிறேன். — மு. செல்வக்குமார், திருகோணமலை.

★

கடந்த 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வாஹினியில் வலம் வந்த வளர்பிறை எல்லோரது வரவேற்பையும் பெறும் வகையில் ஒளி வீசியது. வயதானவ [illegible] குரலில் ஹஸனலியார் வழங்கிய பாடல் அபாரமாக இருந்தது. — எம். பீ. நியாஸ்தீன், சில்மியாபுரம்.

★

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த பல இடங்களில் கடந்த சில மாதங்களாக வானொலி தமிழ்ச் சேவை இரண்டின் காலை ஒலிபரப்பு நிகழ்ச்சிகளைக் கேட்க முடியாமலுள்ளது. உடுதெனிய, மாரஸ்ஸன, தெல்தோட்டை, உக்குவலை, மானம்பொடை போன்ற பகுதிகளிலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. இது பற்றிப் பல முறை அறிவித்தும் பலனில்லை. — நூருல் சிபா, ரியால், ரிபாத், ஹாயிஸ், உடுதெனிய — மல்கன் ஏ. வஹாப், மானம்பொட.

★

"காதம்பரி"யில் ஒளிபரப்பான "டெலிபோன்" ஹாஸ்ய நிகழ்ச்சி எம் போன்ற ரசிகைகளை மகிழ்ச்சியிலாழ்த்தியது. — செல்வி சாந்தி வேலாயுதம், அச்சுவேலி.

★

வானொலி நாடகங்களை எல்லாம் வாஹினி நாடகங்களாக்கி டி. வியில் ஒளிபரப்ப வேண்டுகிறேன். — செல்வி ந. சசிகலா, லிந்துல.

★

"காதம்பரி" என்றால் மெல்லிசைப் பாடல்களைத் தானா பாட வேண்டும்? பொப்பிசை, [illegible] பாடி ரசிகர்களை மகிழ்விக்கலாமல்லவா? — செல்வி ருக்மணி அமிர்தலிங்கம், சிலாபம்.

**JAI-NUL JEWELLERS**

கைதேர்ந்த தொழிலாளர்களினல் நங்கையர்கள் விரும்பும் நவநாகரிக டிசைன்களில்

சுத்தமான 22 கரட் தங்கத்திஞல் தங்க நகைகளை செய்து தரும் தலைநகரில் தலைசிறந்த ஒரே இடம்:

**ஜெய் – நுல்**

**நகை மாளிகை**

3, செட்டியார் தெரு சந்தி, கொழும்பு — 11,

தொலைபேசி: 549477

# ரயிலை நிறுத்திக் கொள்ளை அடிக்கும் கும்பல் தமிழ்நாட்டில் அட்டகாசம்

கொள்ளை அடிப்பதற்காக தண்டவாளத்தில் பாறாங்கல்லை போட்டு, 20 முகமூடிகள் ரயிலை நிறுத்திஞர்கள். என்ஜின் டிரைவரை அடித்து தாக்கிஞர்கள்.

திருப்பத்தூர், ஜோலார் பேட்டை பிரிவில் இந்த சம்பவம் நடந்தது.

மல்லாஞர், பச்சூர் ஆகிய கிராமங்களுக்கு இடையே ஒரு ரயில் வந்து கொண்டிருந்தது. முகமூடி அணிந்த 20 மர்ம மனிதர்கள் அந்த ரயிலை நிறுத்திஞர்கள்.

தண்டவாளத்தில் பெரிய பாறுங்கல்லை உருட்டி வைத்திருந்தார்கள். அதனுல் ரயில் நிறுத்தப்பட்டது.

ரயில் நின்றதும் புதரில் மறைந்திருந்த 20 முகமூடிகள் பாய்ந்து வந்தார்கள்.

ரயில் நின்ற பிறகுதான் அது பிரயாணிகள் ரயில் அல்ல, சரக்கு ரயில் என்று தெரிந்தது. இதஞல் முகமூடி மர்ம மனிதர்கள் ஏமாற்றம் அடைந்தார்கள்.

அதனுல் ஆத்திரமடைந்த முகமூடிகள் என்ஜின் டிரைவர் பயர்மேன் ஆகியோரை கீழே இழுத்துப் போட்டு தாக்கிஞர்கள்.

அவர்களிடம் இருந்த பணம், மோதிரம், கடிகாரம் ஆகியவற்றை பறித்துக் கொண்டு இருளில் ஓடி மறைந்தார்கள்.

முகமூடிகள் அனைவரும் இந்தியில் பேசிஞர்கள்.

(ம-10)

**JAI-NUL JEWELLERS**

மாணிக்க கற்கள், வைர மோதிரங்கள், வைர நெக்லஸ்கள், என்டிக் சாமான்கள் வகைகளுக்கும்

நயம், நாணயம், நம்பிக்கைக்கு சிறந்த இடம்:

தலைமையகம்:-

**ஆப்தீன்**

**ஜுவலர்ஸ்**

இல. 24, ஜஞதிபதி மாவத்த, கொழும்பு — 1.

தொலைபேசி: 547431 - 21612

# அணு ஆயுத ஆபத்து பற்றி இந்திரா

உலகின் பெரும் ஆபத்தைத் தோற்றுவிக்கப் போகின்ற அணுவாயுதப் போரிலிருந்து மக்களைக் காப்பாற்ற அணுவாயுதக் குறைப்புப் பேச்சுக்களை மீண்டும் தொடங்க வேண்டுமென்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமது இந்த வேண்டுகோளை அமெரிக்காவும், சோவியத் யூனியனும் ஏற்குமென்று தான் நம்புவதாகவும் திருமதி இந்திரா காந்தி தெரிவித்துள்ளார். அமெரிக்க தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்த இந்தியப் பிரதமர் சோவியத் யூனியன், அமெரிக்கா, சீன, பிரான்ஸ் ஆகிய நாடுகள் அணுவாயுத உற்பத்தியைக் குறைக்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் அரசியல் சுதந்திரம் பெற்றுள்ள நாடுகள் உட்பட நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை உத்தரவாதம் செய்தல் என்னும் அவசரப் பிரச்சினைக்கு வெற்றிகரமாகத் தீர்வு காண்பதற்கு, அணு ஆயுதப் போரைத் தடுத்தல், ஆயுதக் குறைப்பு மற்றும் படைக் குறைப்பு பற்றி திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுப்பது அவசியம்.

இக் கண்ணேட்டத்தில்தான் படைக் குறைப்புக்கும், வளர்ச்சிக்கும் இடையேயுள்ள தொடர்பைச் சோவியத் யூனியன் காண்கிறதென்று சோவியத் வெளிநாட்டு அமைச்சர் ஆந்திரி குரோமிகோ ஐ. நா. பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலை நாடுகளால் தூண்டி விடப்படும் ஆயுதப் போட்டி



இந்திரா

யின் விளைவாக ஆண்டு தோறும் ஏராளமான பொருளாதார மற்றும் அறிவுத் துறை வளங்கள் பயனற்ற காரியங்களுக்காகச் செலவிடப்படுகின்றன.

உலக மக்களில் கணிசமான பகுதியினர் ஊட்டச் சத்துக் குறைவாலும், வியாதிகளாலும் வாடுகின்றனர். ஆரம்பக் கல்வியும், மருத்துவ வசதியும் இல்லாமல் அவதிப்படுகின்றனர்.

60 கோடி மக்கள் இன்று இவ்வுலகில் முழுதாக அல்லது அரைகுறையாக வேலையற்றிருக்கின்றனர். 90 கோடி வயது வந்த மக்களுக்கு எழுதவோ; படிக்கவோ தெரியாது. 50 கோடி மக்கள் போஷாக்குச் சக்தியின்மையால் வாடுகின்றனர். நூறு கோடிக்கு அதிகமானவர்கள் வறுமையில் உழலுகின்றனர்.

ஐ. நா. நிபுணர்களின் கணிப்பின் பிரகாரம் வளர்ச்சி பெற்ற நாடுகளின் இராணுவ வரவு, செலவுத் திட்டத்தில் ஒரு சதவீதத்தைக் குறைத்தால் அதன் மூலம் அவசர உணவுத் தேவைக்கான சேமிப்புக்கு நிதியளிக்க முடியும்.

ஆயுதப் போட்டியை நிறுத்தி உலக வியாபகமான ஆயுதப் பரிகரணத்தை ஏற்படுத்திஞல் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் சமுதாய — பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான மேலதிக நிதிகளைப் பெறமுடியும்.

மேலை நாடுகள் தமது "ஜீவாதார நலன்கள்" என்று கூறி புதிய மண்டலங்களை வளர்முக நாடுகளில் திணித்துள்ளன. அத்துடன் இந்த வளர்முக நாடுகளின் வளர்ச்சிக்கு அவசியமான நிதிகளை ஆயுத செலவீனங்களுக்காகத் திருப்பி விட நிர்ப்பந்திக்கின்றன.

1983 இல் பெரும்பாலான ஆசிய நாடுகளின் இராணுவ செலவீனங்கள் ஏறுமுகமாகச் செல்ல ஆரம்பித்தன. இன்று அவற்றின் வருமானத்தில் 20 சதவீதம் அவற்றின் பாதுகாப்புச் செலவீனங்களுக்காக ஒதுக்கப்படுகின்றன ஆசியான் நாடு உலக நாடுகள் ஏற்றுக் கொள்ளுமா?

## யுத்த எதிர்ப்பு இயக்கம்

ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியா ஆகிய கண்டங்களில் யுத்த எதிர்ப்பு இயக்கம் பேரலை வீசத் தொடங்கியுள்ளது.

மேற்கைரோப்பாவில் சில நாடுகள் ஏவுகணைகள் வைக்கப்பட்ட பின்னர் உலகின் ஏவுகணை எதிர்ப்பு இயக்கம் பெரிதும் வலுவடைந்துள்ளது என்பதனை நேட்டோவின் சில அவதானிகளே ஒப்புக் கொண்டுள்ளனர்.

மேற்கைரோப்பாவின் நடுத்தர வீச்சுடைய அணுவாயுத ஏவுகணைகளை வைக்கும் நேட்டோவின் கூட்டுத் திட்டத்

## பூலோக சஞ்சாரம்

**சுகாசி**

துக்கு நிதியளிக்க டென்மார்க் மறுத்துள்ளது. இதற்கு நிதியளிக்கக் கூடாதென்று டென்மார்க் நாடாளுமன்றம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

ஹாலந்தில் 65 சதவீதமான மக்கள், ஏவுகணைகளை நிறுவுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். மக்கள் எண்ணங்களையும் மீறி நெதர்லாந்தில் 48 ஏவுகணைகளை நிறுத்துவது அரசாங்கத்துக்கு இலகுவான காரியமாக இருக்க முடியாதென்று அரசியல்வாதிகளும், திருச்சபை பிரதிநிதிகளும் தெரிவித்துள்ளனர்...துள்ளது. அண்மையில் இங்கு நடைபெற்ற ஊர்வலம் ஒன்றில் 50 லட்சம் மக்கள் கலந்து கொண்டனர். அணுவாயுதங்களுக்கும், ஆயுதப் போட்டிக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் மக்களின் உணர்வலைகள் ஆழமாகவும் அகலமாகவும் வேரூன்றியுள்ளமை நல்லதொரு அறிகுறியே.

அணுவாயுதமற்ற ஐரோப்பாவை உருவாக்குவதில் ஐரோப்பிய மக்கள் கொண்டுள்ள அக்கறையும், ஆவலும் நன்கு வெளிப்பட்டுள்ளன.

## இஸ்ரவேல்

தென்னபிரிக்கக் குடியரசுக்கும், இஸ்ரவேலுக்கும் இடையிலான இராணுவ ஒத்துழைப்புகள் பெரும் வளர்ச்சி அடைந்துள்ளதாகத் தெரிகிறது.

ஜோஹன்ஸ் பேர்க்கில் இருந்து வரும் "ஸ்டார்" பத்திரிகை இது குறித்து விவரமான தகவல்களை வெளியிட்டுள்ளது. தென்னபிரிக்காவின் தலைநகரான பிரிடோரியாவில் வடிவமைக்கப்பட்ட நவீன லாவி என்ற குண்டுவீச்சு — சண்டை விமானம் இஸ்ரவேலில் உருவாக்கப்பட்டு முடிவுறும் தறுவாயில் உள்ளது.

தென்னபிரிக்காவினதும், இஸ்ரவேலினதும் நிபுணர்கள் கடும் பாதுகாப்புகளுக்கு மத்தியில் கேப்டவுனுக்கு அருகேயுள்ள கடற்படைத் தளத்தில் அணு ஆயுத நீர்மூழ்கி ஒன்றைக் கட்டுவதில் ஈடுபட்டுள்ளனர். இஸ்ரவேல் ஆயுத ஏற்றுமதியில் 70 சதவீதம் இன்று தென்னபிரிக்காவைச் சென்றடைகிறது என்றும் "ஸ்டார்" பத்திரிகை வெளி... லிபியா தற்கொலைப் படைகளைத் திரட்டுவதென்று முடிவு செய்திருக்கிறது.

அமெரிக்க, பிரிட்டிஷ், இஸ்ரவேலிய வழிகாட்டலின் கீழ் சூடானிய ஜஞதிபதி ஜாபர் நிமேறி நாசகார, படுகொலைப் பயிற்சி முகாம்களை அமைத்திருக்கிருர் என்று அல் ஸஹ்ப் அல் அட்டர் (பசுமைப் பயணம்) என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

## பாகிஸ்தான்

பாகிஸ்தானிய இராணுவ அதிகாரிகள் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் மேலும் 7 எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுக்குத் தடை விதித்தனர்.

நடைபெற இருந்த அரசியல் கூட்டம் ஒன்றை நிறுத்து முகமாகவே இந்தத் தடை விதிக்கப்பட்டதாக எதிர்க்கட்சி வட்டாரங்கள் கூறின.

இந்த ஏழுபேரில் ஜனநாயக மீளமைப்பு இயக்கத் தலைவரான நவாப் சாதா நஸ்ருல்லா கானும் அடங்குகிருர்.

## சவூதி அரேபியா

சவூதி அரேபிய மன்னர் பஹத்தின் இரகசிய வைத்திய ஆலோசகராக இஸ்ரவேலியப் பேராசிரியரான மொஷே மண்ணி இருந்து வந்தாரா?

இவ்வாறு வெளிவந்த பத்திரிகைச் செய்திகளைப் பேராசிரியர் நேற்று மறுத்தார்.

இஸ்ரவேலிய பல்கலைக்கழகத் தலைவரான பேராசிரியர் மொஷே மண்ணி இந்தச் செய்தியைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்றும், செய்தி முழுக்க, முழுக்க ஒரு கண்டுபிடிப்பே என்றும் வர்ணித்தார்.

## எகிப்து

எகிப்திய பொதுத் தேர்தலில் ஆளும் கட்சியான தேசிய ஜனநாயக கட்சி வெற்றி பெற்றது.

448 ஆசனங்களைக் கொண்ட மக்கள் பேரவையில் தேசிய ஜனநாயகக் கட்சி 391 ஆசனங்களைப் பெற்றது.

இரண்டாவது இடத்தைப் பெற்ற வாப்ட் கட்சிக்கு 57 ஆசனங்கள் கிடைத்தன.

எதிர்க்கட்சியில் இருந்த 3 சிறிய கட்சிகளுக்குப் பதிலாக வலதுசாரி கட்சி இடம்பெற்றிருப்பது எகிப்தின் அரசியல் நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறதென கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது.

(ம- 10)

பெண்மைக்கு மெருகேற்றும் இளமைக்கு எழிலூட்டும்



**ஆங்கிலம் பேச**

**SPOKEN ENGLISH CLASS**

இலகுவான மொழிபெயர்ப்பு முறையினைக் கையாண்டு துரிதகெதியில் ஆங்கிலம் பேசப் பழகிக் கொள்ள அரிய சந்தர்ப்பம். ஆரம்பத்திலிருந்து உயர்தரம் வரை...

எழிலாடும்
நகைகள்
அழகிய, கலைநயம் மிக்க புதுமையான 22 காரட் தங்க நகைகளை அளிப்பவர்கள்
ஸ்ரீ முத்துமீனாட்சி
ஜுவெல்லரி
152-B செட்டியார் தெரு, கொழும்பு-11. தொலைபேசி: 29104, 33164





அவற்றின் வருமானத்தில் 20 சதவீதம் அவற்றின் பாதுகாப்புச் செலவீனங்களுக்காக ஒதுக்கப்படுகின்றன. ஆசியான் நாடுகள் 1982 இல் 800 கோடி டாலர்கள் இராணுவ நோக்குங்களுக்காகச் செலவிட்டுள்ளன.

ஆயுதப் போட்டி இன்று அணுவாயுதப் போட்டியாக மாறியுள்ள வேளையில், சமாதானத்தை நேசிக்கும் மக்கள் விசனமடைவதில் தவறில்லை. ஏனெனில் அணுவாயுதத்தின் அழிவுச் சக்தியை உலகம் ஏற்கனவே அறிந்துள்ளது. உலகையே சாம்பர் மேடாக்கும் இத்தகைய அணுவாயுதப் போட்டியினால் யாருக்கும் நன்மையில்லை. வெற்றி பெறுவாருமில்லை, தோல்வி அடைவாருமில்லை.

இது குறித்து இந்தியப் பிரதமர் விடுத்த வேண்டுகோளை துக்கு இலகுவான காரியமாக இருக்க முடியாதென்று அரசியல்வாதிகளும், திருச்சபை பிரதிநிதிகளும் தெரிவித்துள்ளனர்.

நேட்டோவின் ஒரு அங்கத்துவ நாடான கிரீஸ், மேற்கு ஐரோப்பாவில் ஏவுகணைகளை நிறுத்துவதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஜப்பானில், "வசந்த காலப் பயிற்சி"களின் போது ஜப்பானிய மக்கள் பெரிய மாநாடு ஒன்றைக் கூட்டி அணுவாயுதங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். தமது அணுவாயுதங்களற்ற மூன்று கோட்பாடுகளையும் வலியுறுத்தியுள்ளனர்.

அணுவாயுதங்களுக்கும், ஆயுதப் போட்டிக்கும் எதிர்ப்புத் தெரிவித்து ஊர்வலங்களில் செல்பவர்களின் தொகை ஹேக்கில் உச்சக் கட்டத்தை அடைந் வேல ஆயுத ஏற்றுமதியில் 70 சதவீதம் இன்று தென்னாபிரிக்காவைச் சென்றடைகிறது என்றும் "ஸ்டார்" பத்திரிகை வலியுறுத்தியுள்ளது.

## லிபியா

தற்கொலைப் படைப் பிரிவுகளை உருவாக்குவதென்று லிபிய மக்கள் காங்கிரஸ் (நாடாளு மன்றம்) முடிவு செய்திருக்கிறது.

அண்டை நாடான சூடானுக்கு எதிராகவே இப் படை திரட்டப்பட இருக்கிறது. லிபியாவின் உத்தியோகபூர்வ செய்தி ஸ்தாபனமான "ஜானா" இத் தகவலை நேற்றிரவு வெளியிட்டது.

அண்டை நாடான சூடானில் இயங்கி வரும் நாசகார, படுகொலைப் பயிற்சி முகாம்களை அழித் தொழிப்பதற்காகவே

# திருமலை நாயக்கர் கால செப்பேடு கண்டுபிடிப்பு

மதுரை மாவட்டம் இராஜாக்காப்பட்டி என்னும் ஊரில் திருமலை நாயக்கர் காலத்தைச் சேர்ந்த செப்பேடு ஒன்று தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இத்துறை, திருமலை நாயக்கரால் வெளியிடப்பட்ட செப்பேடுகள் அனைத்தையும் ஒரு நூலாகத் தொகுத்து வெளியிடத் திட்டமிட்டுள்ளது.

அது தொடர்பாகத் திருமலை நாயக்கர் காலச் செப்பேடுகளைத் திரட்டும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. அந்தப் பணியின்போது, இத்துறையால் நடத்தப்பெற்ற கோடைக்காலக் கல்வெட்டுப் பயிற்சியில் பங்கு பெற்று, பயிற்சி அடைந்த உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் திரு. பழனியப்பனும் இத்துறைக் கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர் திரு. கோபால்சாமியும் இச் செப்பேட்டினைக் கண்டு பிடித்துள்ளனர்.

இராஜாக்காப்பட்டியைச் சேர்ந்த திரு. வி. பொன்னையன் தந்த தகவலின் பேரில், இவர்கள் இச் செப்பேட்டினைச்சென்று பார்த்தனர்.

கி.பி. 1667 ஐச் சேர்ந்த இச் செப்பேடு திரு. கொண்டக்கருப்பத் தேவர், திரு. வெள்ளையத் தேவர் ஆகியோரிடம் இருக்கிறது.

இது சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்னர் எலிபிடிப்பவர்கள் சிலரால் பூமிக்கடியிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது.

நீள் சதுர வடிவமான இச் செப்புப் பட்டையம் கைப்பிடியுடன் காணப்படுகிறது.

திருவத்தேவன், பெயத்தேவன் ஆகியோரது குடும்பத்தாரால் கோவலன் கணவாய்க் கருகில் தண்ணீர்ப் பந்தல் ஒன்று நிறுவப்பட்டு அதனைப் பராமரிக்க திருமலை நாயக்க மன்னர் புன்செய் நிலத்தினைக் கொடையாக அளித்ததை இச்செப்பேடு குறிக்கிறது.

தங்களால் ஏற்படுத்தப்பட்ட தண்ணீர்ப் பந்தலுக்கு அரச மானியம் வேண்டுமென்று அவர்கள் அரசன் முன்பாகத் தங்கத்தாலும் வெள்ளியாலும் செய்த மலர்களைப் பரிசாக அளித்து, விண்ணப்பம் செய்ததாகச் செப்பேடு விவரிப்பது மிக அழகாக உள்ளது.

கொடையளிக்கப்பட்ட நிலத்தின் எல்லைகள் தெளிவாகத் தரப்பட்டுள்ளன.

அவை அனைத்தும் இன்றும் அதே பெயரில் அங்கு வழங்கப் பெறுவது அறிந்து மகிழத் தக்கது. கோவலன் கணவாய்என்று குறிக்கப்பெறும் வழி சிலப்பதிகாரக் கதையை நினைவூட்டுகிறது. (ம-சி)


விற்பனையாகின்றன
புதிதாக வந்திறங்கிய
கூரைத் தகடுகள்
DAFFODIL
மார்க்
கல்வனைஸ்ட்
கூரைத்தகடுகள்
DAFFODIL

பெரிய நெளிவுகள் — 26 கேஜ் — 6 அடி முதல் 10 அடி வரையான நீளங்களில் — ஓர் அடி ரூ. 17/-
பெரிய, சிறிய நெளிவுகள் — 28 கேஜ் — 6 அடி முதல் 10 அடி வரையான நீளங்களில் — ஓர் அடி ரூ. 14/-
பெரிய, சிறிய நெளிவுகள் — 30 கேஜ் — 6 அடி முதல் 10 அடி வரையான நீளங்களில் — ஓர் அடி ரூ. 11/50

FIVE STAR
மார்க்
கல்வனைஸ்ட்
பிளேயின்
தகடுகள்
DAIWA
FIVE STAR

| | | |
|---|---|---|
| 8' x 3' x 34' | கேஜ் — ஒவ்வொன்றும் | ரூ. 97/50 |
| 8' x 3' x 32' | கேஜ் — ஒவ்வொன்றும் | ரூ. 115/50 |
| 8' x 3' x 30' | கேஜ் — ஒவ்வொன்றும் | ரூ. 140/- |
| 8' x 3' x 28' | கேஜ் — ஒவ்வொன்றும் | ரூ. 155/- |
| 8' x 3' x 26' | கேஜ் — ஒவ்வொன்றும் | ரூ. 180/- |
| 8' x 3' x 24' | கேஜ் — ஒவ்வொன்றும் | ரூ. 225/- |
| 8' x 3' x 22" | கேஜ் — ஒவ்வொன்றும் | ரூ. 335/- |

வியாபாரிகளுக்குத் தள்ளுபடி உண்டு
வியாபாரம் ரொக்கப் பணத்துக்கே
கிடைக்குமிடம்:-
தேவ் அண்ட் ஸ்ரீ என்டர்பிரைஸ்
19, அப்துல் ஜப்பார் மாவத்தை,
கொழும்பு - 12 தொலைபேசி:- 33807, 27044



இலகுவான மொழிபெயர்ப்பு முறையினைக் கையாண்டு துரிதகெதியில் ஆங்கிலம் பேசப் பழகிக் கொள்ள அரிய சந்தர்ப்பம். ஆரம்பத்திலிருந்து உயர்தரம் வரை, தனித்தனியாகப் போதிக்கப்படும். ஆண் பிள்ளைகளுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் வெவ்வேறான வகுப்புகள். ஏனைய விவரங்களுக்கு செவ்வாய், வியாழன் அல்லது சனி மாலை 4.00 மணிக்கும், 6.00 மணிக்கும் இடையில் நேரில் வரவும்.

ஆசிரியர், கொமன்வெல்த் கலாசாலை
ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி வகுப்பு,
86/29 சில்வர் சிமித் ஒழுங்கை (தட்டாரத்தெரு — ஒழுங்கை),
துர்க்கை அம்மன் கோவிலடி, கொழும்பு - 12
COMMONWEALTH COLOMBO ACADEMY



## வானொலி வகுப்புகள்

1984 இன் இரண்டாம் குழுவுக்கு மாணவ, மாணவிகள் சேர்க்கப்படுவர். நேரில் கற்பதற்கும், தபாற் போதனைக்கும் வகுப்புகளுண்டு. அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழும், உபகரணங்களும் இலவசம். எமது கல்வி நிலையத்தில் படித்து படிக்கின்றவர்களுக்கு தொலைக்காட்சிப் பாடத் தொகுப்பு இலவசம். எமது 15 வருட அனுபவத்தில் முழு நிறைவான அறிவைப் பெறுங்கள். நேரிலோ 9"X4" அளவுள்ள சொந்த முகவரியிட்ட முத்திரை உறையனுப்பியோ விவரங்களை இலவசமாகப் பெறலாம்.

அதிபர்,
டெக்னிக்கல் ட்ரெயினிங் சென்டர்
235, 2 ஆம் மாடி, ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு - 11.



## "மந்திரயோகி" வசிய, மாந்திரீக, வைத்தியம்

அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்டது பதிவு இலக்கம் C 433

அன்பர்களே! சூனியம், வசிய மருந்திடு, பேய் பிசாசுக் கோளாறுகள், கண்ணூறு, நாவூறு, ஆண், பெண் இரகசிய பாலியல் நோய்கள், தடைப்பட்ட மாதவிடாய்க் கோளாறுகள், தீராத நோய்கள், பிரச்சினைகளை அனுமான் அஞ்சன மை வெளிச்ச மூலமாகவும், மாந்திரிகக் குறி மூல அறிந்து, மருந்து அக்குப்பங்சர், ஹிப்நாட்டிச,மனோவசிய யோக சிகிச்சை மூலமாகவும், மாகவும், தெய்வத் துணைகொண்டு மாந்திரிக சக்தியினாலும் தீர்த்துக் கொள்ள, குடியை மறக்க, எதிரியை அடக்க, விரும்பியவர்களை வசியமாக்க, பரீட்சையில் சித்தியடைய, நேர்முகப் பரீட்சையில் எடுபட, தொழில் கிடைக்க, வியாபார விருத்தி அடைய, சுவீப் அதிர்ஷ்டம் கிடைக்க, வழக்கு வெல்ல, வீடு, வளவு, உடலைக் காவல் பண்ண, மட்டக்களப்பு நான்காவது பரம்பரை வைத்தியர் மலையாளத்திலேயும், மாந்திரீக சித்தர் என அழைக்கப்படும் மாந்திரீகக் கலாநிதி, சித்த மருத்துவ பண்டிட் மனோதத்துவ டாக்டர் "மந்திரயோகி" M.B.B.S. (H) S.M.P. (இந்தியா) D.A (இலங்கை)யுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

ஆண், பெண் (காதலன் — காதலி) வசியம். நீங்கள் விரும்பும் பெண் அல்லது ஆணை வசியமாக்கி எல்லோருடைய சம்மதத்துடனும் திருமணம் செய்ய முதல் கடிதத்திலேயே முழுவிபரமும் இருவரின் பெயர்களும். தெரிந்தால் தாய், தந்தையர்களின் பெயர்களும். ஏமாற்ற மாட்டேன்,



சத்தியமாகத் திருமணம் செய்வேன் என்றும், பெண்ணைக் காப்பாற்றும் தகுதி அறிய தொழில் வருவாய் பற்றிய விவரமும் எழுத வேண்டும். நேரில் வர முடியாதவர்களுக்கு மருந்து மாத்திரம் செய்து பார்சலில் அனுப்பப்படும். 3 ரூபா 50 சத முத்திரையும், 50 சத முத்திரை ஒட்டிய சுய விலாசமிட்ட கவரும், அனுப்புபவர்களின் விடயங்கள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும். 10 ரூபாவிற்கு மணியோடர் அனுப்புவர்களின் விடயங்கள் உடன் கவனிக்கப்படும்.

டாக்டர் "மந்திரயோகி"
இந்தியன் வைத்தியசாலை,
கல்லடி, மட்டக்களப்பு.
BATTICALOA.